இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 25 ஒக்டோபர் 2024 இதழ்:- 21

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தயார்! ஆனால் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மட்டும் வர மாட்டேன் 15 ஆண்டுகள் கழிந்தும் புலிப் பயம் போகாத கோத்தபாயா



2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல் போன இரண்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தொடர் ஷபில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தைத் தவிர நாட்டின் எந்த நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றத்தில் (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க
eelanadu.ca

## தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு!

உங்கள் எல்லோரிடமிருந்தும் தப்பி. உங்கள் கட்சி இன்னும் பல காலம் உயிர் வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன். கம்பவாருதி ஜெயராஜின் பகிரங்க மடல் 9ம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களை சீரழித்த தமிழ்த்தேசியக் கட்சிகள்!

பாராளுமன்றத் தேர்தல் தமிழ்பேசும் சமூகங்களைத் தடுமாற வைத்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதையும் விட தேசிய மக்கள் சக்திக்கான (NPP அல்லது AKD) ஆதரவு அலை அதிகமாகக் காணப்படுகிறது. யாரைப் பார்த்தாலும் தேசிய மக்கள் சக்தி (NPP அல்லதுAKD)யைப் பற்றியே பேசுகிறார்கள். மாற்றத்துக்கு ஒரு வாய்ப்பளித்தால் என்ன? என்று கேட்கிறார்கள். (17ம் பக்கம் பார்க்க)



## அநுரவின் பின்கதவு அரசியல் நகர்வும் சிறுபான்மை மக்களும்



KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7

NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd



**Oshawa** **$279,000**

0 Beds • 1 Bath • 1 Rooms

Welcome To University Studios!

### Sheppard Ave & Allen Rd



**Toronto** **$619,000**

2+1 Beds • 2 Baths • 4+1 Rooms

Close To Subway, Ttc, York University

### Neilson/Tapscott




**Scarborough** **$445,000**

2 Beds • 2 Bath • 5 Rooms

Close to the Hwy 401 and the TTC

### Kennedy Rd / Hwy 401




**Scarborough** **$699,000**

2+1 Beds • 2 Bath • 6 Rooms

Freshly painted & renovated!

### Sheppard & Neilson




**Malvern** **$699,900**

3 Beds • 2 Baths • 6 Rooms

Low Maintenance Fees!

### Simcoe St N/ Brittania Ave



**Oshawa** **$770,000**

4 Beds • 3 Baths • 9 Rooms

Corner lot Just like Semi Townhouse

### McLevin Ave & Morningside




**Malvern** **$880,000**

3+1 Beds • 3 Baths • 6+2 Rooms

Finished Basement

### Townline Rd & Shankel Rd




**Oshawa** **$999,900**

3 Beds • 4 Baths • 8 Rooms

Close To Highway 401, 418, 407

### Sheppard Ave E / Neilson Rd



**Scarborough** **$842,000**

3 Beds • 3 Baths • 6+2 Rooms

FULLY RENNOVATED

### Church St N & Rossland Rd W




**Ajax** **$899,999**

3 Beds • 3 Baths • 6 Rooms

Hardwood flooring throughout

### Church St N & Rossland Rd W



**Ajax** **$899,999**

3 Beds • 3 Baths • 6 Rooms

Upgraded Hardwood Floors

### Kellough St/ Mcneil St



**Innisfil** **$1,295,000**

4+1 Beds • 5 Baths • 11+3 Rooms

Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens




**Markham** **$630,000**

2 Beds • 2 Baths • 4 Rooms

Minutes to Stouffville Hospital

### Mara & King




**Beaverton** **$729,800**

4 Beds • 3 Baths • 9 Rooms

2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave

FOR LEASE



**Scarborough** **$2,500**

3+1 Beds • 3 Bath • 10+3 Rooms

Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave

FOR LEASE



**Scarborough** **$1,900**

2 Beds • 1 Bath • 4 Rooms

Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தயார்! ஆனால் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு மட்டும் வர மாட்டேன் 15 ஆண்டுகள் கழிந்தும் புலிப் பயம் போகாத கோத்தபாயா



2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல் போன இரண்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தொடர் பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றத்தைத் தவிர நாட்டின் எந்த நீதிமன்றத்திலும் சாட்சியமளிக்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள் ளார். உச்ச நீதிமன்றத்தில் 22 ஒக் டோபர் 2024 நடைபெற்ற விசார ணையின் போது அவரது சட்டத் தரணி ரொமேஷ் டி சில்வா ஊடாக இதனை அவர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமல் போன மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகி யோர் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு, அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ச, யாழ்ப்பாண நீதிவான் நீதி மன்றில் சாட்சியமளிக்க முதலில் அழைக்கப்பட்டிருந்தார். எனினும், பாதுகாப்பு காரணங்களால் அங்கு முன்னிலையாக முடியவில்லை என அவர் வாதிட்டார். முன்னாள் ஜனாதி பதி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாது என்றாலும் இலங்கையில் உள்ள வேறு எந்த நீதி மன்றத்திலும் சாட்சியங்களை சமர்ப் பிக்கத் தயாராக இருப்பதாக கோட்டா பய ராஜபக்சவின் வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பை சவாலுக்கு உட் படுத்தி காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக் கவலைகள் நீதிமன்றத்திற்கு தெரி விக்கப்பட்டது.

ஜனாதிபதியாக இருக்கும் போது கோட்டாபய ராஜபக்சவை சாட்சியாக அழைக்க முடியாது என்று முந் தைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந் தது.

நீதிபதிகள் பிரீத்தி பத்மன் சுசூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு இந்த வாதங் களை கேட்டது. கோட்டாபய ராஜ பக்ச ஜனாதிபதியாக பதவி வகிக்கா ததால், சாட்சியம் அளிக்கும்படி கட்டாயப்படுத்த உத்தரவிட வேண் டும் என்று மனுதாரர்கள் கோரியுள் ளனர். இந்த வழக்கை மேலும் பரிசீலிப்பதற்காக, அடுத்த விசார ணையை மார்ச் 18, 2025க்கு நீதி மன்றம் ஒத்தி வைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன செயல்பாட்டாளர்களின் குடும்பத்தி னரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட் கொணர்வு மனுவை அடுத்து யாழ் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் 2019 இல் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆணையை அனுப்பியது. அந்த நேரத்தில், அவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப்பா ணத்திற்கு பயணிக்க முடியாது என வாதிட்டதுடன் ஆணையை தள்ளு படி செய்ய வேண்டும் என்று கோரி யிருந்தார்.

அவரது ஜனாதிபதி பதவி தற்போது முடிவடைந்த நிலையில் இந்த வழக் கில் அவரை சாட்சியமளிக்க அழை க்கலாமா என்பதை உச்ச நீதிமன்றம் தீர்மானிக்கும், இது முன்னாள் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இது போன்ற வழக்குகளுக்கு முன்னோடி யாக அமையும்.

# ரணிலையும் கம்மன்பிலனையும் சந்தேகிக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை!

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பாக முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார்.

குண்டுவெடிப்புக்கு முன்னர் குறிப் பிட்ட புலனாய்வு அதிகாரிகள் மேற் கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.என்.ஜே அல்விஸ் தலை மையில் குழுவொன்றை இந்த வருட ஆரம்பத்தில் நியமித்ததன் பின்னணி குறித்து அவர் வினவியுள்ளார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று நடந்த இந்த தாக்குதல் தொடர்பாக, முன்னைய அரச புலனாய்வு சேவை, தேசிய புலனாய்வுத்துறை மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளின் நட வடிக்கைகளை விசாரிக்கவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.



எனினும் ரணில் விக்ரமசிங்க புதிய குழுவொன்றை நியமித்தமை சந்தே கத்திற்குரியது என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளான சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகி யோரை அரசியல் ரீதியாகப் பலிகடா ஆக்குவதற்காகவே அல்விஸ் தலை மையிலான (20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிய அநுர அரசின் கருத்துக்கள் தொடர்பில் அநுர இந்தியா செல்லும் போது அவதானம் செலுத்தும்?



தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் சமகால அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் வெளிப்படுத்தி வரும் கருத்துகள் தொடர்பில் புதுடில்லி அவதானம் செலுத்தியுள்ளது.

பொதுத் தேர்தல் முடிந்தவுடன் நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து விட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாக்க இந்தியா செல்ல திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸா நாயக்க தெரிவான பின் முதல் இராஜ தந்திரியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் கடந்த 04ஆம் திகதி இலங்கைக்கு அதிகாரப்பூர்வ பயணமொன்றை மேற் கொண்டதுடன், ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல்வேறு தரப்பினரை சந்தித்திருந்தார்.

அரச தரப்பினருடனான சந்திப்பில் இலங்கைக்கு தொடர்ந்து இந்தியா உதவிகளை வழங்கும் எனக் கூறி யிருந்ததுடன், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக கருதப்படும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துவதன் அவசியத்தையும் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், கடந்த சில தினங் களுக்கு முன்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்து வெளி யிட்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, வடக்கு மக்கள் 13ஆவது திருத்தச்சட்டத் தையோ அல்லது அதிகாரப் பகிர் வையோ கோரவில்லை. அது அரசி யல்வாதிகளின் கோரிக்கை மாத்திரமே. இந்த மக்களுக்கு தமது பொருளா தார நலன்கள் நிறைவேற வேண்டும் என்பதே தேவையாக உள்ளது எனக் கூறினார்.

ரில்வின் சில்வாவின் கருத்துக்கு வடக்கின் தலைமைகள் கடும் கண்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன், இராஜதந்திர மட்டத்தி லும் இந்தக் கருத்து தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அநுரகுமாரவின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்பில் இலங்கை யில் உள்ள இராஜதந்திரிகள் ஏற்க னவே, அவதானம் செலுத்தியுள்ள சூழலிலேயே தமிழ் மக்களுக்குத் தீர்வு அவசியமில்லை எனக் கூறப்படும் கருத்துகளும் வெளியாகி வருகின் றன.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத் தின் முக்கிய செயல்பாட்டாளர்களாக உள்ளவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் வெளிப் படுத்தப்படும் கருத்துகளை குறித்து புதுடில்லி கழுகுப்பார்வை செலு த்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரத் தில் அறிய முடிந்தது.

இது தொடர்பில் மௌனம் காக்கும் இந்தியா, அநுரகுமார திஸாநாயக்க புதுடில்லிக்கு பயணம் மேற்கொள் ளும் சந்தர்ப்பத்தில் தமது நிலைப் பாட்டை தெளிவாக வெளிப்படுத்த உள்ளது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக் கான தீர்வு தொடர்பில் அரசியல மைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் தொடர்பில் நேரடியான கருத்துகளை ஜனாதிபதி வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடு க்கவும் புதுடில்லி தயாராகி வருவ தாக இராஜதந்திர வட்டாரத்தில் அறிய முடிந்தது.

## காசாவில் முக்கிய தளபதியை இழந்த இஸ்ரேல்

வடக்கு காசாவில் நடந்த போரில் இஸ்ரேலிய கேணல் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹமாஸுடனான போரில் கொல்லப்பட்ட இஸ்ரேல் நாட்டின் மிக உயர்ந்த அதிகாரிகளில் இவர் அடங்குகிறார். 162வது பிரிவின் 401வது 'இரும்புப் பாதைகள்' படைப்பிரிவின் தளபதி கேணல் எஹ்சான் தக்சா (41) ஞாயிற்றுக்கிழமை இறந்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அறிவித் தன.

கடந்த ஆண்டு டிசம்பரில் வடக்கு காசா சுற்றுப்புறமான ஜாயாவில் இறந்த கேணல் யிட்சாக் பென் பாஷேட்டிற்குப் பிறகு காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய அதிகாரிகளில் டாக்சாவும் ஒருவர். இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தக்சாவை 'இஸ்ரேலின் ஒரு ஹீரோ, ஒரு போர் வீரன் மற்றும் தளபதி' என்று விவரித்தார், அவர் 'இஸ்ரேல் மற்றும் அதன் குடிமக்களின் பாதுகாப்பில் முழுமையாக பங்களிப்பை மேற்கொண்டவர் என தெரிவித்தார். தக்சாவின் மனைவி ஹடா மற்றும் அவரது குழந்தை கள் ஓம்ரி, ரிஃப் மற்றும் யாஸ்மின் ஆகியோருக்கு அவர் ஆறுதல் கூறினார். காசாவில் ஹமாஸுக்கு எதிரான போரில் தக்ஸா இறந்து விட்டதாக இஸ்ரே லிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் கூறினார்




கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக் களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# வடக்கு கிழக்கு மக்கள் தமிழரசின் "வீடு" சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும் - சங்கு எனக்குரிய சின்னம் அல்ல

சங்கு சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல. அது ஒரு சுயேட்சியின் சின்னமாகும். இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின்படி, சுயேட்சை குழுவில் யாரும் போட்டியிடலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட்டவருமான பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.



இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஞானமுத்து சிறிநேசனுக்காக மட்டக்களப்பு மாவட்டம் பாட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி நகரப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தேர்தல் பரப்புகளை மேற்கொண்டிருந்தனர். இதில் அரியநேத்திரனும் கலந்து கொண்டார்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமல்ல, வட கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்வது யாதெனில், இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு வீடு சின்னத்துக்கு நிச்சயமாக வாக்களிக்க வேண்டும்.

மட்டக்களப்பை பொறுத்த வரையில் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எமது கட்சியை சேர்ந்த மூத்த உறுப்பினரான ஞானமுத்து சிறிநேசன் அவர்களுக்காக நாம் பிரசாரப் பணியில் ஈடுபட்டு வருகின்றோம். அவருக்காக வீடு சின்னத்துக்கும் ஆறாம் இலக்கத்துக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும். அதே வேளை ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் மக்கள் வாக்களிக்கலாம்.

ஒரு சிரேஷ்ட உறுப்பினர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுகின்ற போது அபிவிருத்திகள் மாத்திரமின்றி தமிழ் தேசிய அரசியலை மேற்கொண்டு செல்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருக்கும் என்கின்ற காரணத்தினால் நாம் அவருக்காக பரப்புரை செய்து வருகின்றோம்.

ஒரு கல்விமானாகவும், இலங்கை தமிழ் கட்சியிலே மூத்த உறுப்பினராகவும், கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து அவர் செயற்பட்டு வருகிறார்.

நான் இலங்கை தமிழரசு கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். இன்றும் இலங்கை தமிழரசு கட்சியிலே தான் இருந்து கொண்டிருக்கிறேன். எனவே சங்கு சின்னத்தை ஜனாதிபதித் தேர்தலுக்காக பாவித்தது உண்மை.

பின்னர் அந்த சின்னத்தை யார் எடுக்கிறார்கள், எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பில் தேர்தல் சட்ட திட்டங்கள் உள்ளன. சுயேட்சைக் குழுவாக யார் தேர்தல்களில் போட்டியிட்டாலும் அல்லது அரசியல் கட்சிகள் போட்டியிட்டாலும் சின்னங்களை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

ஒரு கட்சி கோருமாக இருந்தால் அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற சின்னத்தை வழங்குவார்கள். இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒரு சின்னத்தை கோருவார்களாக இருந்தால் திருவுளச்சீட்டு மூலம் அந்த சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கும். ஆகவே சங்கு சின்னத்தை இப்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்கின்ற அமைப்பு பெற்றுள்ளது. அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றார்.

# மாற்றம் என்ற மாயை?

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இதுகால வரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்த ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கிறது. பண்டா — செல்வா ஒப்பந்தமும் டட்லி — செல்வா ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்ட வேளைகளில் ஜே.வி. பி. தோன்றியிருக்கவில்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் 1981ஆம் ஆண்டில் கொண்டுவந்த மாவட்ட அபிவிருத்தி சபை தொடக்கம் இந்தியாவின் தலையீட்டையடுத்து அதே ஜெயவர்த்தன அரசாங்கம் 1987 ஆம் ஆண்டில் கொண்டு வந்த மாகாணசபை வரை சகல தீர்வு முயற்சிகளையும் ஜே.வி.பி. எதிர்த்தது. அதன் அரசியல் அகராதியில் அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமிருந்ததில்லை. ஆனால் கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திசநாயக்க வெற்றி பெற்று பதவிக்கு வந்த பிறகு இனப்பிரச்னை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜேவி.பி.யின் நிலைப்பாட்டில் ஓரளவுக் கேனும் நெகிழ்ச்சித் தன்மை ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு இல்லை இல்லை.

எங்களிடம் அது விடயத்தில் எந்த மாற்றத்தையும் எதிர் பார்க்காதீர்கள் என்று சொல்வதைப் போன்று ஜே.வி.பி. யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இவ்வார முற்பகுதியில் தனியார் தொலைக்காட்சி சேவையொன்றில் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கருத்துக்களை வெளியிட்டார். அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு தேவையில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் தான் தங்களது அதிகாரத்தை தக்க வைப்பதற்கு அதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் கூறினர். ஜனாதிபதி திசநாயக்கவை பதவிக்கு கொண்டு வந்ததன் மூலம் தென்னிலங்கை மக்கள் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படும் மாற்றத்தில் தங்களது அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு இடமளிக்கப்படும் என்பதில் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே இருந்து வருகின்ற ஐயுறவை வலுப்படுத்தும் வகையில் ரில்வின் சில்வாவின் கருத்துகள் அமைந்திருக்கின்றன.

ஊழல்வாதிகளையும் இனவாதிகளையும் அரசியலில் இருந்து ஒதுங்க வைப்பதில் தாங்கள் வெற்றி கண்டிருப்பதாக ஜே.வி.பி.யின் பல தலைவர்கள் அண்மைய நாட்களில் கூறினார்கள். இனவாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்கினால் மாத்திரம் போதாது. அந்த இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் விதைத்த தவறான சிந்தனைகளும் இல்லாமல் போனால்தான் ஜே.வி.பி. தலைவர்கள் உரிமை கோருகின்ற வெற்றியில் அர்த்தமிருக்க முடியும்.

ஆனால், தமிழ் மக்கள் 13ஆவது திருத்தத்தை கேட்கவில்லை என்பதும் தமிழ் அரசியல்வாதிகளே அதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் ரில்வின் சில்வா புதிதாகக் கண்டு பிடித்த ஒன்றல்ல. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் குறைந்த பட்சமானவற்றைக் கூட ஏற்றுக் கொள்ளாத சிங்கள இனவாதிகள் நீண்டகாலமாக செய்து வரும் ஒரு பிரசாரம்தான். மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் தோற்று விக்கப் போவதாக சூளுரைத்து ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியும் அதே இனவாதிகளின் கருத்துக்களிலேயே ஆழக்காலூன்றி நிற்பதாக இருந்தால் மாற்றம் என்பது உண்மையில் ஒரு மாயையே தவிர வேறு ஒன்றுமில்லை.

# புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுப்போம் - கனடாப் பிரதமர் உறுதி!



ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப் போன்று கனேடிய வாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவதாகவும், அவர்களைப் பாதுகாப்பதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்க வேண்டும் எனவும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவின் தேர்தல் முறைமைகள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீதான வெளியகத் தலையீடுகள் தொடர்பில் கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட பகிரங்க நேர்காணலில் கலந்து கொண்டு பதிலளித்த கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழர் உரிமைகள் குழுவின் உறுப்பினர் கற்பனா நாகேந்திராவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனடாவின் ப்ரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு வலியுறுத்தி ப்ரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு டொரன்டோவில் உள்ள இலங்கையின் கொன்சியூலர் நாயகம் துஷார ரொட்ரிகோவினால் கடந்த மேமாதம் எழுதப்பட்ட கடிதம், கடந்த ஒகஸ்ட் மாதம் ஆங்கில ஊடக மொன்றினால் பகிரங்கப்படுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து அந்நினைவுத்தூபியை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட வேளையிலும், அதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தி அங்கு வாழும் புலம்பெயர் சிங்களவர்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற் குறிப்பிட்ட பகிரங்க நேர்காணலின் போது கனடாவில் வாழும் தமிழர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தினால் அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று கற்பனா நாகேந்திரா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ட்ரூடோ, இக்குறித்த சம்பவம் தனக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப் போன்று கனேடியவாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்த அவர், எனவே புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# சுமந்திரன் - ஸ்ரீதரன் சமரசப் பேச்சு?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களும், யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறிதரன் இடையே சமரசம் ஏற்படுவதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த பேச்சுக்களின் ஆரம்பகட்டத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளையடுத்தே வேட்புமனு தாக்கல் மற்றும் வேட்பாளர் அறிமுக விழாவில் இருவரும் ஒரே நேரத்தில் பிரசன்னமாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிதரனுக்கும், எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கட்சியின் தலைமைத்துவத்தை மையப்படுத்திய போட்டி காணப்பட்டது.

கட்சியின் தலைவருக்கான தேர்தல் நடத்தப்பட்டபோது இந்த நிலைமை மிகத் தீவிரமடைந்திருந்தது. அதன் பின்னர் சிறிதரன் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதனையடுத்து, சுமந்திரன் கட்சியின் செயலாளர் பதவியை கோரினார். இதனையடுத்து சார்ச்சைகள் ஆரம்பித்தன. புதிய தெரிவுகளை பொதுச்சபை ஏற்றுக் கொள்வதில் குழப்பங்கள் நீடித்தன.

தொடர்ந்து 17ஆவது தேசிய மாநாடு பிற்போடப்பட்டது. நீதிமன்ற இடைக் காலத் தடையால் அவரால் அப்பதவியில் நீடிக்க முடிந்திருக்கவில்லை.

இதனையடுத்து, இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்த நிலையில் இறுதியாக கட்சியின் வேட்பாளர்கள் தெரிவு வரையில் தொடர்ந்திருந்தன. (22ம் பக்கம் பார்க்க)

# 13வது திருத்தம் தொடர்பில் ராஜபக்ஷாவின் சித்தாந்தத்தை ஜே.வி.பி. கைவிட வேண்டும் - மு.கா. தலைவர் ஹக்கீம் கோரிக்கை!

13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜே.வி.பி.யினர் ராஜபக்ஷக்களின் சித்தாந்தத்தை பின்பற்றுவதை முழுமையாக கைவிட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரவுப் ஹக்கீம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பியினர் மார்க்சிச இடதுசாரித்துவக் கொள்கையைக் கொண்டவர்கள். அவர்கள் இரண்டு கிளர்ச்சிகளைச் செய்ததன் பின்னர் மீண்டும் ஜனநாயக வழிக்கு வந்தார்கள். அதன் பின்னர் இந்திய, இலங்கை ஒப்பந்தத்துக்கு 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டுப் போராடினார்கள்.

பின்னர் அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, மாகாண சபைகளுக்கான தேர்தலில் பங்கேற்று உறுப்புரிமைகளையும் பெற்றுக் கொண்டார்கள். இந்தச் செயற்பாடானது அவர்களின் முற்போக்கான வரவேற்கக் கூடியதொரு பிரதிபலிப்பாகக் காணப்பட்டது.

அது மட்டுமன்றி நிறைவடைந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர், மாகாண சபை முறைமையை அமுலாக்கப் போவதாகவே அறிவித்திருந்தனர்.

இருப்பினும் தற்போது அவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு



எதிரான நிலைப்பாடுகளையும், அதிகாரப்பகிர்வு அவசியமில்லை என்ற தோற்றப்பாட்டிலும் கருத்துக்களை பகிர்ந்துள்ளார்கள்.

உண்மையில் அதிகாரப்பகிர்வு தேவையில்லை அபிவிருத்தி தான் அவசியம் என்பது ராஜபக்ஷக்களின் சித்தாந்தம். அந்த சித்தாந்தம் ஜே.வி.பிக்குள் தற்போது எட்டிப்பார்க்கிறது.

தற்போது நாட்டின் அனைத்து மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழவேண்டும் என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் அந்தந்த இனங்களுக்குரிய தனித்துவம் பாதுகாக்கப்பட்டு சுயாட்சி அளிக்கப்பட வேண்டும்.

தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதன் மூலமாகத் தான் நாட்டில் உள்ள இனங்களுக்கு இடையிலான நீண்டகால முரண்பாடுகளுக்கு தீர்வினை எட்ட முடியும். ஆகவே, ஜே.வி.பி. அதிகாரப்பகிர்வு சம்பந்தமான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக இருந்தால் முதலில் அவர்களின் கொள்கையில் மாற்றம் ஏற்படுவது அவசியமாகும். அதிகாரங்கள் பகிரப்படாமல் உண்மையான மாற்றத்தினை அடைவது கடினமான காரியமாகும்.

அது மட்டுமன்றி அவர்கள் முன்னுக்குப் பின்னாக தமது கொள்கைகளை மாற்றி மாற்றி வெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாகக் கூற வேண்டியது அவசியமாகிறது என்றார்.

# கனடாவில் யாழ்ப்பாணக் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை! பெண்களைச் சீண்டிப் பார்த்த தமிழர் ஒருவர் கைது!

கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் யாழ்ப்பாணம் மயிலிட்டியை சொந்த இடமாகவும் மார்க்கம், ஒன்ராறியோ, கனடாவில் வசித்து வந்தவருமான பஞ்சலிங்கம் பார்த்தீபன் (வயது -44) என்பவரே உயிரிழந்துள்ளார். கனடாவின் ஒன்ராறியோ மாநிலம் மார்க்கம் பகுதியில் உள்ள அவரது வீட்டு வாசலில் வைத்து 19 ஒக் 2024 சனிக்கிழமை அதிகாலை இனம்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது, மேற்படி நபர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிருக்கு போராடியுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த போது அவர் உயிரிழந்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்துள்ளனர். முன்பகை காரணமாக இச்சம்பவம் இடம் பெற்றிருப்பதாக தெரிய வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கனடாவில் பெண்களுடன் தகாத முறையில் ஈடுபட்ட தமிழர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். மார்க்கம் பகுதியில் வசிக்கும் 62 வயதான மகேந்திரன் தம்பிரத்தினம் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.கடந்த வாரம் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெண்ணொருவருடன் தகாத முறையில் செயற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின் பிணையில் விடுக்கப்பட்ட நிலையில், மற்றுமொரு பெண்ணுடனும் தற்போது தகாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், கடந்த 12ஆம் திகதி டெனிசன் தெரு மற்றும் கார்ட்மெல் டிரைவ் பகுதிக்கு அருகே பெண்ணொருவரை தவறான நடவடிக்கைக்கு உட்படுத்த முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)
Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# மட்டக்களப்பில் ஜே.வி.பி. சிங்கள இளைஞர்களை சுட்டுத்தள்ளப் போவதாக மிரட்டிய பிள்ளையான் குழு

தேசிய மக்கள் சக்திக்காக (NPP) மட்டக்களப்பில் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தென் இலங்கையைச் சேர்ந்த இளைஞர்களை, ரீ.எம்.வி.பி. என்ற பிள்ளையான் குழு உறுப்பினர் தாக்கிய காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது.

முறக்கெட்டான்ஞ்சேனை பகுதியில் அமைக்கப்பட இருந்த தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்திற்கு சென்ற TMVP உறுப்பினர்கள், சிங்கள இளைஞர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்ததும் தெரிய வருகின்றது.

ரீ.எம்.வி.பி. என்கின்ற அமைப்பு ஏற்கனவே பல கொலைகள், ஆட்கடத்தல்கள், வல்லுறவு என்று பலவிதமான குற்றச்சாட்டுக்கசளுக்கு உள்ளான ஒரு தரப்பு என்பதுடன், அரசியல் செய்யும் இந்த ஆயத அமைப்பின் தலைவர் பிள்ளையான் எனப்படுகின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையில் சம்பந்தப்பட்டதாக சிறையிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக பிள்ளையான் அநுர



குமார ஆட்சியால் விரைவில் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகின்ற நிலையில், அவரது கட்சி உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடாத்தி, அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னிலங்கை சிங்கள இளைஞர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த பிள்ளையான குழு உறுப்பினர் ஒரு சிறைச்சாலை அதிகாரி என்றும் கூறப்படுகின்றது. மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடமை புரியும் குழந்தைவேல் நவணீதன் என்ற அதிகாரியே, தென்னிலங்கையில் இருந்து தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்கான மட்டக்களப்பு வந்திருந்த தேசிய மக்கள் சக்தி இளைஞர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தது தெரிய வருகின்றது.

அந்த சிறைச்சாலை அதிகாரி ரீ.எம்.வி.பி. என்ற பிள்ளையான குழுவின் உறுப்பினர் என்பதுடன், சமூக ஊடகங்கள் வாயிலாக பலரையும் மிரட்டி வருகின்ற ஒருவர் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பிட்ட ந்த நபர் தொடர்பாக சந்திவெளிப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# வன்னி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொழில் முனைவோருக்காக புதிய நிதித் திட்டத்தை ஆரம்பித்த தொழில்அதிபர் சுகுமார் கணேசன்




அக்டோபர் 21, 2024 அன்று, வன்னி மாவட்டத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மற்றும் பாதிக்கப்படக் கூடிய பெண்களை வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற்றும் நோக்கில் மாற்றியமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. கனடாவின் பிரபல தமிழ் தொழில் அதிபராகத் திகழும் திரு.கணேசன் சுகுமார் மற்றும் Sugshe குழுமத்தால் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, அவர்களின் குடும்பங்களில் முதன்மை வருமானம் ஈட்டும் பெண்களை மேம்படுத்த முயல்கிறது.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் திரு. ஜீவன் தியாகராஜா, உள்ளூர் கிராமிய வங்கிகளின் ஆதரவுடன், இந்தத் திட்டத்திற்கான நிதியை நிர்வகிப்பதில் முக்கியமான பங்கை ஏற்றுள்ளார். இந்தத் திட்டம் பெண்களுக்கு தொடக்க நிதியாக ரூ. 50,000, இரண்டு வருட திருப்பிச் செலுத்தும் கால விருப்பத்துடன், வட்டி இல்லாமல் வழங்கப்படுகிறது.

இந்த முன் முயற்சியின் மூலம், பங்கேற்பாளர்கள் பயிற்சி மற்றும் கல்வியைப் பெறுவார்கள், அவர்கள் தங்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு மட்டுமல்லாமல், அவர்களின் குழந்தைகள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு வழிகாட்டக் கூடிய அறிவுள்ள தலைவர்களாகவும் ஆக்கப்படுவார்கள். திரு. சுகுமார் இந்த வெற்றிகரமான மாதிரியை மற்ற மாகாணங்களுக்கும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார், பரந்த பொருளாதார வலுவுட்டல் மற்றும் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அறுகம்பைத் தாக்குதல் திட்டம்:- சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது

இலங்கையிலுள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக திட்டமிட்ட சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரும் ஈராக்கைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19 — 23ஆம் திகதிகளுக்கு இடையில் அறுகம்பை பகுதியில் தங்கியிருக்கும் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் உள்ளதாக, இந்திய உளவு அமைப்புகள், இலங்கைக்கு அறிவித்திருந்தன.

இந்த நிலையில் இலங்கையைச் சேர்ந்த இருவர் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் ஈராக்கை சேர்ந்தவர் என்றும் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் சில காலத்திற்கு முன்னர் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரே இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர் என விசாரணைக் குழுக்கள் கண்டறிந்துள்ளன. தாக்குதல் நடத்துவதற்காக சுமார் 50 லட்சம் ரூபா பணம் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் யாழ். சுன்னாகத்தில் ஒருவர் கடந்த 20 ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் கைதை அடுத்தே அறுகம்பை தாக்குதல் தாயாரிப்புப் பற்றிய விவகாரம் வெளிவந்திருக்கலாம் என்று சில பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ். சுன்னாகத்தைச் சொந்த இடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட 42 வயதுடைய இவர் 2016ஆம் ஆண்டு முதல் சில காலம் இலங்கைச் சிறையில் இருந்து பின்னர் விடுதலையாகியுள்ளார். சிறையில் இருந்த சமயம் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டுக் கைதிகளுடன் இவருக்கு நட்பு ரீதியான பழக்கம் ஏற்பட்டுள்ளது. சிறையில் இருந்து விடுதலையானவர் பாகிஸ்தான் மற்றும் ஈரான் (20ம் பக்கம் பார்க்க)

# அனுரகுமாரவும் எதிரணியும்!

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எந்தத் தேவையும் இல்லை. அரசியல் எதிரணி ஒழிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதே எதிர்வரும் பாராளு மன்ற தேர்தலில் வாக்காளர்களின் பொறுப்பு. இன்று நாட்டுக்கு தேவைப்படுவது பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்றே தவிர, எதிர்க்கட்சி அல்ல. அதனால் அடுத்த பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் மக்கள் நிரப்ப வேண்டும். ‘ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் விளைவாக முன்னைய பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் சுமார் 60 அரசியல்வாதிகள் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

எஞ்சியிருக்கும் ஊழல்வாதிகளையும் எதிரணி அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் புதியவர்களையும் தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் பாராளுமன்றத்தை துப்புரவாக்கும் பணியை வாக்காளர்கள் நிறைவு செய்ய வேண்டும்.’ இலங்கையில் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்ட மாவட்டங்களில் ஒன்றான கம்பஹாவில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை தொடக்கி வைத்து கடந்த ஞாயிறன்று கட்டுநாயக்காவில் பேரணி ஒன்றில் உரை யாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவும் அவரின் வலதுகை அமைச்சர் விஜித ஹேரத்தும் தெரிவித்தனரென கொழும்பு பத்திரிகைகளில் வெளியான கருத்துகள் இவை.

தங்களின் உரைகளை மக்களை தவறாக வழி நடத்தும் நோக்கில் அந்தப் பத்திரிகைகள் திரிபு படுத்தி செய்திகளை வெளியிட்டன என்று இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதிக் கொண்டிருந்த தருணம் வரை அவர்கள் இருவரிடமும் இருந்து எந்த மறுப்பும் வந்ததாக இல்லை. புதிய ஜனாதிபதியாக திசநாயக்கவை தெரிவு செய்ததன் மூலம் மக்கள் பாரம்பரியமான ‘பிரதான’ அரசியல் கட்சி களையும் அவற்றின் தலைவர்களையும் நிராகரித்திருப்பதுடன் மாற்றத்தைக் கொண்டு வரக் கூடிய ஒரு தலைவராக அவர் மீதான நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்கள். பழைய கட்சிகளின் இது கால வரையான தவறான ஆட்சி முறையையும் ஊழல் முறை கேடுகளையும் அதிகார துஷ்பிரயோக ங்களையும் இனி மேலும் பொறுத்துக் கொள்ளத் தயாரில்லை என்பதை உலகுக்கு மக்கள் தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நிராகரித்த கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

ஆனால், மக்கள் முன்னிலையில் உருப்படியான கொள்கைகளையோ, வேலைத் திட்டங்களையோ அவை முன்வைக்கவில்லை. மக்களிடம் எதைக் கூறுவது என்று தெரியாமல் அவை தடுமாறுகின்றன. புதிய அரசாங்கத்தின் மீது தவறு கண்டு பிடிக்க அவை ‘முட்டையில்...... பிடுங்குகின்றன.’ அவற்றை எவ்வாறு கையாளுவது என்பது மக்களைப் பொறுத்த விடயம். ஊழல்தனமான அரசியல் கலாசாரத்தை கட்டி வளர்த்தவர்களை ஜனநாயக தேர்தல் செயன்முறைகளின் மூலமாக நிராகரிப்பதற்கு முன்னதாக வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்வதன் மூலமாகவும் அதிகாரத்தில் இருந்து தங்களால் விரட்ட முடியும் என்று நிரூபித்தவர்கள் இலங்கை மக்கள். அதேவேளை இரு வருடங்களுக்கு முன்னர் இலங்கை வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னென்றும் இல்லாத வகையிலான அமைதியான தேர்தலில் சுமுகமான அதிகார மாற்றத்தையும் உறுதி செய்தவர்கள் அவர்கள்.

இதேவேளை, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மூன்று தசாப்த கால இடைவெளியில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்து தோல்வி கண்ட ஜனதா விமுக்தி பெரமுனவின்(ஜே. வி. பி.) வன் முறை கடந்த காலத்துக்கு அதை நெடுகவும் பணயக் கைதியாக வைத்திருக்காமல் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை மக்கள் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்பகத்தன்மையான ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை நோக்கியதன் விளைவாகவே இன்று அதன் தலைவரான திசநாயக்கவை மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள்.

பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்று மாத்திரமே இன்றைய தேவை என்றும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எந்தத் தேவையும் இல்லை எனவும் ஜனாதிபதியினதும் அமைச்சர் ஹேரத்தினதும் கருத்துகள் ஜனநாயக அரசியல் மீதான அவர்களின் பற்றுறுதி மீது மக்களுக்கு நிச்சயம் சந்தேகத்தை ஏற்படுத்தும். பாராளுமன்றத்தை துப்புரவு செய்வது என்பது பழைய ஊழல்தனமான அரசியல் வர்க்கத்தவர்களை ஜனநாயக ரீதியாக தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவது என்று மாத்திரம் அமைய வேண்டுமே தவிர, பாராளுமன்றத்தில் எதிரணியே இருக்கத் தேவையில்லை என்று ஒரு போதும் ஆகிவிடாது. ஊழலற்ற அரசாங்க நிருவாகத்தை உறுதி செய்வதற்கு பாராளுமன்றத்துக்கு புதியவர்களை தெரிவு செய்வதைப் போன்று அரசாங்கத்தின் தவறுகளையும் இடம் பெறக்கூடிய அதிகார மீறல்களையும் தட்டிக் கேட்க புதியவர்களைக் கொண்ட எதிரணியும் வேண்டும். அதுவும் இன்று நாட்டுக்கு அவசியமாக தேவைப்படுகிறது

# மாகாணசபையை நெறிப்படுத்துவதற்கான பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு!



மாகாண சபை பொறிமுறையை நெறிப்படுத்துவதற்கான பிரேரணையை தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளார். 22 ஒக் 2024 ஜனாதிபதி செயலகத்தில் மாகாண ஆளுநர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி மாகாண சபைகளின் கீழ் உள்ள சுகாதார மற்றும் கல்வி சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு சாதகமான தீர்வுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய நிலைமாறு காலத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை இலகுபடுத்தும் வகையில் சிறந்த சேவையை வழங்க மாகாண சபைகள் செயற்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாண சபைகளினால் சாத்தியமான அனைத்து பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மாகாண ஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்தார். புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பிப்பதற்கு கிடைத்த ஆணையை நினைவு கூர்ந்த ஜனாதிபதிஇ மக்களின் நம்பிக்கையை குலைக்காத செயற்பாடுகள் குறித்தும் வலியுறுத்தினார்.

அரசாங்க சொத்துக்களை பயன்படுத்துவதில் முன்னைய மோசமான முன்னுதாரணங்களை அகற்றி தரமான அரச சேவைக்கு தம்மை அர்ப்பணிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க ஆளுநர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்போது வடக்கு கிழக்கு காணிகள் மற்றும் மாகாண சபை நிதியின் பயன்பாடு தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றதுடன் கந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் சேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர, மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன், வடமத்திய மாகாண ஆளுநர் வசந்தா குமாரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசியத்தை அழிக்க சூட்சுமமாக காய் நகர்த்தும் ஜே.வி.பி



தமிழ் தேசியத்தை மலினப்படுத்துவதற்கு ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சூட்சுமமாக காய்களை நகர்த்தி வருகின்றது. அச்செயற்பாடு தமிழினத்தின் இருப்புக்கு மிகப் பெரிய ஆபத்து என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி. அனைவரும் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் வர வேண்டுமென்ற கோசத்தை முன்னெடுப்பதானது தமிழ்த் தேசியக் கோட்பாட்டை கரைப்பதையே அடிப்படை இலக்காக கொண்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜே.வி.பியானது தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. அந்தத் தரப்பு பாராளுமன்றத்துக்கும் அதிகாரம் கோரி இப்போது தமிழ் மக்களை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறது.

ஜே.வி.பியை பொறுத்த வரையில் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வேண்டும் என்பதே கோரிக்கையாக உள்ளது.

தமிழ் மக்கள் தங்களுடைய தனித்துவத்தையும் இருப்பையும் அடையாளத்தையும் உறுதி செய்வதற்காகவே கடந்த ஏழு தசாப்தங்களாக போராடி வருகின்றார்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகள் இது வரையில் பூர்த்தி செய்யப்படாத நிலைமையே காணப்படுகிறது. அவர்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வு வழங்கப்படவில்லை. ஜே.வி.பியிடம் அது குறித்த தெளிவான நிலைப்பாடு இல்லை.

அத்தகையதொரு நிலைமையில், தமிழர்களை ஜே.வி.பியின் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வைக்கும் முயற்சியானது தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்துவதையே நோக்கமாக கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தெளிவுற வேண்டியது அவசியமானது. மாற்றம் அவசியம் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியத்தை பெருந்தேசியத்துக்குள் கரைக்கும் சூ ட்சுமமான நகர்வுகளுக்கு துணை போகக்கூடாது. அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின், தமிழினத்தின் இருப்புக்கே ஆபத்தாகி விடும் என்றார்.



# தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு!

**- இலங்கை ஜெயராஜ் -**

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு! ஐயன்மீர்!, உங்களுக்கு எனது வணக்கங்கள்.

உங்கள் எல்லோரிடமிருந்தும் தப்பி, உங்கள் கட்சி இன்னும் பல காலம் உயிர் வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

முறைப்படி இக் கடிதத்தை நான் உங்கள் கட்சித் தலைவருக்குத் தான் எழுதவேண்டும். ஆனால், இன்றைய நிலையில், தலைவர் இல்லாக் கட்சியாய் உங்கள் கட்சி மாறியிருக்கும் கொடுமையினை என்ன சொல்ல?

தலையில்லா உடம்பாகத் தத்தளிக்கிறது உங்கள் கட்சி. அதனாற் தான் உங்கள் அனைவரையும் பொதுவில் விளித்து இக் கடிதத்தை எழுதுகிறேன்.

அண்மையில் நீங்கள் தேர்ந்தெடுத்த புதிய தலைவரான ஸ்ரீதரன், அத் தேர்வு தவறென்று, தானே நீதிமன்றில் ஏற்றுக்கொண்டு செயல்பட முடியாமல் இருக்கிறார். பற்றியிருந்த பதவிக் கயிற்றினை விட விருப்பமில்லாமல், அதிற் தொங்கிக் கிடந்த முன்னாட் தலைவர் மாவை ஐயா அவர்கள், அத் தீர்ப்பினைக் கேட்டு மகிழ்ந்து, அப்படியானால் நான் தான் இன்னும் தலைவரா? என்று கொண்டாடிய கூத்தினைக் கண்டு உலகமே சிரித்தது. அவரது நடவடிக்கைகள், ஆசை இருக்குது அரசாள, அம்சம் இருக்குது ஆடு மேய்க்க என்ற பழமொழியைத் தான் பலருக்கும் நினைவுட்டின.

வரும் தேர்தலில் தனக்கும், தன் மகனுக்கும் சீற் இல்லை என்று தெரிந்ததும், விருப்பமில்லாமல் குழப்பம் ஏற்படுத்தி தற்போது தனது தலைவர் பதவியை, அவர் இராஜினாமாச் செய்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

தன் மகனை எப்படியும் எம்.பி. ஆக்கி, தனது சிம்மாசனத்தில் அவரை இருத்த வேண்டும் என்ற ஆசை தான், பலர் பிடித்திழுக்கவும் அவர் அப் பதவியில் விடாது தொங்கிக் கொண்டிருந்ததற்கான காரணம் என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

மக்கள் ஆதரவு எனும் ஆயுதத்தை வைத்து மிரட்டிக் கொண்டிருந்த ஸ்ரீதரனை, புத்திசாலித்தனம் எனும் ஆயுதத்தால் தோற்கடித்துள்ளார் சுமந்திரன். கட்சியின் மத்தியகுழுவைச் சுமந்திரன் தன் வயப்படுத்தி, தனக்கு விருப்பமானவர்களுக்கு மட்டும் தேர்தல் 'சீற்' வழங்கியிருக்கிறார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

அரசியல் சார்ந்த அச் செயலை, முழுமையும் பிழையானது என்று நான் சொல்ல மாட்டேன். வலியவர், மெலியவரை விழுங்குவது நிர்வாகத் துறையில் வழக்கமாக நடக்கும் ஒன்று தான். ஆனால் சுமந்திரனது அந்தப் புத்திசாலித்தனத்தை, தேர்தலுக்கான 'சீற்றுகள் வழங்கிய முறையில் காண முடியவில்லை என்பது தான் வருத்தமளிக்கிறது.

ஓரளவு சமூகத்தால் அறியப்பட்டிருந்த சசிகலா ரவிராஜ், தவராஜா ஆகியோருக்கு இம்முறை 'சீற்' வழங்கப்படவில்லை. அதனால் மனம் நொந்த அவர்கள் 'சீற்' கிடைக்காத கவலையில் கட்சியை விட்டு விலகியிருக்கின்றனர். பதவி கிடைக்கா விட்டால், கட்சி மாறுவது என்ற அவர்களது பாதையும் சரியானதாய்ப் படவில்லை.

அதே நேரத்தில், மேற் சொன்னவர்களின் கோபம் தவறு என்றும் சொல்வதற்கில்லை. அவர்களை விடத் தகுதி குறைந்தவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளமையே அவர்களின் கோபத்திற்கு காரணமாகிறது. நடந்து முடிந்த வேறுவேறு தேர்தல்கள் பலவற்றில், தமிழரசுக் கட்சியால் அடுத்தடுத்து வாய்ப்பளிக்கப்பட்ட இம்மானுவேல் ஆர்னோல்ட் அவர்களுக்கு இம்முறையும் கட்சி 'சீற்' வழங்கியிருக்கிறது.

யாழ். மாநகரசபை மேயராய்'ப் பதவியேற்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் பதவி இறக்கப்பட்டவர் அவர். சென்ற தேர்தலில் 'சீற்' கிடைத்தும் தோற்றுப் போனவர் அவர். கடந்த தேர்தலில் சுமந்திரனால் பதவி பெற்று பின்னர் ஐ.பி.சிஇன் ஆதரவு பெறப்பட்டதாய்ப் பேசப்பட்ட நிலையில், அவரையே கடுமையாய் விமர்சித்து நின்றவர் அவர். இப்படியாய், வினைத்திறன் இல்லாத, மக்கள் ஆதரவு பெறாத, நேர்மைக் குறைவுள்ள ஒருவருக்குக் கட்சி ஆறாவது தடவையாகவும் வாய்ப்பளித்திருப்பதன் காரணம் எவருக்கும் புரியவில்லை. இப்படித் தகாதோருக்கு வாய்ப்பளித்தால் தக்கவர்கள் கோபிக்கத்தான் செய்வார்கள்.



இதுவரை சமூகத்தால் இனம் காணப்படாத ஒருவருக்கு, அவர் தந்தை செல்வாவின் பேரன் என்ற காரணத்தினால் மட்டும் 'சீற்' கொடுத்திருக்கிறார்கள். பரம்பரை நோக்கிப் பதவி கொடுக்க, நடப்பது ஒன்றும் அரச ஆட்சி இல்லை என்பதைத் தேர்வுக்குழு ஏன் மறந்ததென்று தெரியவில்லை. இங்ஙனம் ஒருவருக்குக் கொடுத்தால் பாராளுமன்றம் சென்ற அத்தனை பேரும் தம் பரம்பரைக்கே அப் பதவியை வழங்க விரும்புவார்கள். அமரர் ரவிராஜின் மனைவியின் கோரிக்கையும் அதுவாகத் தான் இருக்கிறது. தேவையில்லாத முன்னுதாரணத்தைத் தேர்வுக்குழு பதிவு செய்திருப்பது வேதனைக்குரிய விடயமே.

ஓரிருவரைத் தவிர, புதிதாக வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும் பலபேரும் இதுவரை சமூகத்தால் இனம் காணப்படாதவர்கள் என்பது பெருங்குறை. இப்போதும், தனது ஆதரவாளர்களான, சமூகத்தால் இனங் காணப்படாத இரு பெண்மணிகள் உள்ளிட்ட ஒரு சிலருக்குச் சுமந்திரன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திச் 'சீற்' கிடைக்கச் செய்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

முன்பும் ஒரு முறை, ஒரு பெண்ணுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமெனச் சொல்லி, சுமந்திரனால் வாய்ப்பளிக்கப்பட்ட சாந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள், பாராளுமன்றப் பதவி பெற்று எந்தச் சாதனையும் செய்யாமல் ஓய்வு பெற்றது தெரிந்த கதைதான். அதே தவறைச் சுமந்திரன், திரும்பத் திரும்பச் செய்கிறாரோ? என எண்ண வேண்டியிருக்கிறது.

சுமந்திரனால் புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களும், இம்முறை தம் பணிகளில் தோல்வியுற்றால், அத் தோல்விக்கான பொறுப்பினைச் சுமந்திரனே ஏற்க வேண்டியிருக்கும் என்பது நிச்சயம்!

அரசியலுக்குப் புதியவர்கள் வர வேண்டும் என்ற கருத்து சரியானது தான். ஆனால் அப் புதியவர்கள் மக்கள் தொண்டின் மூலம் ஏற்கனவே சமூகத்தினால் இனங் காணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமான ஒன்று. இவர்கள் பதவி பெற்ற பின்பு தான் தொண்டு இயற்றுவார்கள் என்பது பொருத்தமற்ற வாதமாய்த் தான் இருக்கும்.

ஒன்று, மக்கள் தொண்டு செய்பவர்களை அரசியலுக்குள் கொண்டு வர வேண்டும். அல்லது தாம் அரசியலுக்குள் கொண்டு வர நினைப்பவர்களை மக்கள் தொண்டு இயற்றச் செய்வித்து சமூக அறிமுகத்தை ஏற்படுத்திய பின்னர், பதவி கொடுக்க வேண்டும்.

சுமந்திரன் இவ்விரண்டையும் செய்கிறார் இல்லை என்பது, நடுநிலையாளர்களால் அவர்மேல் வைக்கப்படும் குற்றச்சாட்டு.

மற்றொன்று, சுமந்திரன் கட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தாலும், துணிந்து சில முடிவுகளை எடுக்கும் திறன் அவரிடம் இல்லாதிருப்பது பெரிய குறையேயாம்.




கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாய்ச் சொல்லி பலருக்கும் 'சீற்' வழங்க மறுத்த சுமந்திரனது கையோங்கிய கட்சியின் தேர்வுக்குழு, அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக் கட்டுப்பாட்டை முற்றுமுழுதாய் மீறி நின்ற, ஸ்ரீதரனுக்கு மட்டும் 'சீற்' வழங்கிய மர்மம் எவருக்கும் புரியாமற் தான் இருக்கிறது.

உங்களது கட்சி, ஆளுக்கொரு நீதி செய்தால் உங்களை நம்பி மக்கள் எப்படித்தான் பின்வரப் போகிறார்களோ? தெரியவில்லை.

தம் இருவருக்கிடையிலான போட்டியில், கட்சியை முடிந்தளவு நலியச் செய்திருக்கின்ற சுமந்திரனும், ஸ்ரீதரனும் தமக்குள் இருக்கும் பகை மாறாமலேயே, தேர்தல் சீற்றுகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். தேர்வு செய்யப்பட்ட பின்பும் ஸ்ரீதரன் பேசி வரும் பேச்சுக்கள் அதை உறுதி செய்கின்றன.

இவர்கள், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்று நினைத்துச் சேர்ந்தார்களா? அல்லது ஒன்றுபட்டேனும் ஒருவரையொருவர் அறுப்போம் என நினைத்துச் சேர்ந்தார்களா? என்பது காலப்போக்கில்த் தான் உறுதியாகத் தெரியப் போகிறது.

அரசியலில் நிரந்தரமான பகைவரும் இல்லை, நிரந்தரமான நண்பரும் இல்லை எனும் உண்மையை, இவர்கள் என்று தான் உணரப் போகிறார்களோ? தெரியவில்லை.

ஒன்று, பகைவர்களாய் நினைந்து விலகி விடவேண்டும், இல்லையேல் நண்பர்களாய் நினைந்து ஒன்றுபட வேண்டும். இவர்கள் அவ்விரண்டையும் செய்வதாய்த் தெரியவில்லை. கட்சிக்குச் சமாதிகட்டி முடிந்த பிறகு தான், இவர்கள் ஒன்றுபடுவார்கள் போலத் தெரிகிறது.

அண்மையில் கட்சியிலிருந்து விலகிய தவராஜா, தேர்தலுக்கான தேர்வுக்குழுவில் இருந்து கொண்டு தமக்கான 'சீற்'றுகளைச் சிலர் ஒதுக்கிக் கொள்வது, சட்டவிரோதம் என அறிக்கை விட்டிருக்கிறார். சுமந்திரனும், ஸ்ரீதரனும் அவர் சொன்ன குற்றச் சாட்டுக்கு ஆளாகியிருக்கின்றனர். சட்டத்தரணியான அவர், சட்டம் பற்றிச் சொல்வது உண்மையாய் இருக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால் ஒன்று, தமிழர் விடுதலைக் கூட்டணிக் காலம் தொட்டு இந்தக் கோளாறு அங்கு நடந்து கொண்டு தான் இருக்கிறது.

அப்போது, சம காலத்தில் கட்சிக்குள் பிரவேசித்தவர்களாக அமிர்தலிங்கமும், இராஜதுரையும் இருந்தார்கள். அவ்விருவரில் அமிர்தலிங்கம் ஒருமுறை வட்டுக்கோட்டை தொகுதியில் நின்று தோல்வியுற்றார். ஆனால், இராஜதுரை தான் கேட்ட தேர்தல்களில் ஒருமுறையேனும் தோல்வியுறவில்லை.

அப்படியிருக்க, த.வி.கூட்டணி எதிர்கொண்ட தேர்தலில், தேர்தல் நியமனக் குழுவில், அமிர்தலிங்கம் தான் இருந்து கொண்டு, இராஜதுரையைத் தேர்வுக்காக அழைத்ததும், அத் தேர்தலில் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு எதிராக இராஜதுரையை எதிர்த்து, காசியானந்தனைத் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட வைத்ததும் அனைவரும் அறிந்த விடயமே.

அத் தேர்தலில் காசியானந்தன் தோற்று இராஜதுரை வென்றதும், கட்சிக்குள் தனக்கு நிகழ்ந்த அவமரியாதையை நினைந்து வருந்திய இராஜதுரை, அரசுடன் இணைந்தார், அவருக்கு நேர்ந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்காத தமிழினம், அவர் அரசுடன் இணைந்ததால், அவரைத் துரோகி என்று அழைத்து இழிவு செய்தது.

தவராஜாவிற்கு இவை பற்றியெல்லாம் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. தகுதி குறைந்தவர்கள் தேர்வுக் குழுவில் இருந்து கொண்டு, தகுதியானவர்களைத் தேர்வுக்கு வரச் சொன்ன அநியாய வரலாற்றை அவரும் நிச்சயம் அறிந்து தான் இருப்பார். தனக்கு அநீதி நேர்ந்ததும் தான், அச் செயலின் கொடுமை அவருக்குப் புரிகிறது.

(20ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நினைவு நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.


எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

11 2024 - 25 ஒக்டோபர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் நிமலராஜன்

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன் - ஊடகவியலாளர் திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாக னம் நிமலராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகள் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா நடராஜா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பையா நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு வாசுதேவன் துரைராஜா

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வாசுதேவன் துரைராஜா அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 08 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக கனடாவில் வாழும் திரு சுதாகர் குடும்பமும் திரு சாந்தகுமார் குடும்பமும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வாசுதேவன் துரைராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அனைவருடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்






### திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது சிரார்த்த தினம் 29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் சார்பாக திருமதி கனகம்மா அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை விஜயதசமி பூஜை உபயமாக கனடாவில் வாழும் செல்வி ஜெகரின்யா மங்களமூர்த்தி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை புரட்டாதிக் கடைசிச்சனி விரத உபயமாக கனடாவில் வாழும் செல்வி ஜெகரின்யா மங்களமூர்த்தி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.




12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அன்னலிங்கம் சந்திரசேகரம்பிள்ளை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை எழுத்து பேச்சு ஊடகம் ஆகியவற்றின் உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட ஊடகவியலாளர் திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சத்தியபாலன் கீர்த்திகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சமுத் அவர்களுக்கும் திரு திருமதி சிவபாலன் சத்தியபாலன் தம்பதிகளின் செல்வப்புதல்வி உஷாந்திகா அவர்களுக்கும் திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்களும் அவர்களது பெற்றோர்களும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



அரியாலையைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த

**லெப்.கேணல்**
**கந்தையா பேரின்பநாதன்**

மலர்வு:- 10.11.1964 உதிர்வு:- 26.10.1996

எங்கள் தம்பி தங்கத் தம்பி தமிழீழத் தம்பி
சிங்கத் தம்பி நீ பாயும் புலிவீரன் தம்பி
அன்புத் தம்பி நீ தம்பியின் மனதில் நிரம்பி
தமிழீழ மலர்வுக்காய் நாடு நாடாய் அலைந்து
நிதி நிரப்பி இயக்கத்தை நிமிர வைத்தவன் நீ
இருபத்தியெட்டு ஆண்டுகள் கடந்தும் நீ
ஈழவர் மனதில் நிலைத்து இருப்பது எமக்குப் பெருமை
தம்பி நாதன் எங்கள் செல்லத்தம்பி நீ
எந்நாளும் உன் நினைவால் வாடுகின்றோம் - தம்பி
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

தகவல்:- சகோதரி யோகாம்பிகை இலங்கேஸ்வரன்
416 754 1221




21 ஒக்டோபர் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிவலிங்கம் சிவகுமார் அவர்களதும் இங்கிலாந்தில் வசிக்கும் திருமதி அபிரா கணநாதன் அவர்களதும் பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் இவர்கள் இருவரும் தமது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




22 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு நரேஷ்குமார் அவர்களது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்




23 ஒக்டோபர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கோணேஸ்வரன் அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரன் சசிதரனின் 32வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மயூரன் தனது பெற்றோர்கள் சகோதரம் மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



CANADA TAMILOSAI
Vijaya Jewellery
இணைந்து வழங்கும்
VIBRANT HOSPITALITY GROUP
AN EVENT BY
தீபாவளியை திருநாளை கொண்டாட
பிரம்மாண்டமான
இசை நிகழ்ச்சி
கனடா மற்றும் தென்இந்திய
கலைஞர்களின் பங்களிப்பில்
DANCE GROUP
PRIMA DANCE SCHOOL EST. 2011
Unity is strength
OCTOBER 26 SATURDAY 2024
சுகமான ராகங்கள்
LIVE MUSIC
MUSIC GROUP
Kalyan's Golden Rhythms
EVENTS START
AT 4:30 PM
FOLLOW US ON
CANADA EVENT CENTRE
300 Water St, Whitby, ON L1N 9B6, Canada
TICKETS
$30, $50, VIP, VVIP
FOR MORE DETAILS 416.625.5010
www.eventbrite.ca
SILVER SPONSORS
BROWNS SPONSORS
EVENT SPONSORS
YASI RAVICHANDRAN 647.273.8121
ABI SRICHANDRADAS Dir: 647.973.9006
JEEVA KANDIAH 416-895-1010
VINO RANJITH
SMART RESTORATION
BMO Bank of Montreal
Ask me how I can help.
416-819-2874 Stenson Arul
EVENT SPONSORS
EAST-WEST
JEEVAN
C. Dental Care

# எப்போதையும் விட அதிக மக்கள் பணி புரிகிறார்கள்

ஒன்டாரியோவில் 2018இலிருந்து 800,000க்கும் மேற்பட்ட வேலைகள் அதிகரித்துள்ளன. முன்பை விட அதிக மக்கள் தங்கள் வீட்டிற்கு பெரும் ஊதியத்தை எடுத்துச் செல்கிறார்கள்.



**இவை எல்லாமே இங்கே நடக்கின்றன.**

ontario.ca/RebuildingOurEconomy
ஒண்டாரியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன்

Ontario



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



THE TAMIL MIRROR October 15, 2024

தமிழ் மிரர்
Tamil Mirror
YOUR BUSINESS FOR GROWTH...
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

You're Welcome



# 19 வது ஆண்டு விழா

## 19th year celebrations

Prof. V. Sangara Narayanan Chief Guest
முனைவர் வே. சங்கர நாராயணன்






# விருது விழா

## Awards Gala

3 வது முப்பாட்டன் முருகன் விழா

3rd Muppattan Murugan Vizha



# NOVEMBER 2024

# 03

# Sunday

4.30 pm

**Chinese Cultural Centre,**
5183 Sheppard Ave East. Tel: 416-697-0126

# அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை

வியட்நாமின் தந்தை என்று அழைக்கப்படும் கோசிமினின் வாக்கியம் ஒன்று உண்டு மக்களிடம் செல்லுங்கள். மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள். மக்கள் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவார்கள் என்று.

மக்களுக்கு உண்மையைச் சொல்வதற்கு தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் தயார்? கடந்த பல தசாப்தங்களில் தமிழ்கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? தமிழ்த் தேசியக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் கூறப்பட்ட விடயங்களில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? அவை ஏன் நிறைவேற்றப்படவில்லை? எல்லாப் பழியையும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மீது சுமத்தி விட்டு தமிழ் தலைவர்கள் தங்கள் தோல்விகளுக்குப் பொறுப்புக் கூறாமல் தப்பி வந்திருக்கிறார்களா? தங்களால் முடியாமல் போன விடயங்களுக்காக யாராவது தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்டிருக்கிறார்களா? கடந்த பல தசாப்த காலமாக தமிழ் அரசியலில் பொறுப்பு கூறாமை என்பது ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டது.

தலைமைத்துவம் என்பது வெற்றிக்கும் தோல்விக்கும் பொறுப்புக் கூறுவது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் பொறுப்புக் கூறுவது. வரவுக்கும் செலவுக்கும் பொறுப்புக் கூறுவது.ஆ னால் தமிழ் அரசியலில் எத்தனை பேர் அவ்வாறு பொறுப்பு கூறியிருக்கிறார்கள்? தமது தேர்தல் அறிக்கைகளுக்கு எத்தனை பேர் பொறுப்புக் கூறியிருக்கிறார்கள்?

இந்த விடயத்தில் ஆயுதப் போராட்டத்தை தனியாக ஆராய வேண்டும். ஆனால் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலை தொகுத்துப் பார்த்தால் எத்தனை தலைவர்கள் தமது தோல்விகளுக்கு பொறுப்பு கூறியிருக்கிறார்கள்?

உள்ளதில் பெரியதும் மூத்ததும் ஆகிய கட்சி தமிழரசுக் கட்சி. அதற்கு ஆங்கிலத்தில் பெடரல் பார்ட்டி என்றும் பெயர் உண்டு. கடந்த 74 ஆண்டுகளாக, தனது பெயரில் உள்ள பெடரலை அதாவது சமஸ்டியை ஏன் அடைய முடியவில்லை என்பதற்கு அந்தக் கட்சி தன் மக்களுக்கு எப்போதாவது பொறுப்புக் கூறியிருக்கிறதா? தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத செல்வநாயகம், அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்காமல், மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னாரா?

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது தமிழர் விடுதலைக் கூட்டணி.சில ஆண்டுகளிலேயே, 81ஆம்ஆண்டு மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்களை நோக்கிச் சரணடைந்தது. அதற்கு அவர்கள் பொறுப்புக் கூறினார்களா? மன்னிப்பு கேட்டார்களா?

நவீன தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் ஆகக்கூடிய நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றிருந்த காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தேர்தல் கேட்ட காலகட்டம் தான். 22 ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் தமிழ் பிரதிநிதித்துவம் உச்சமாக இருந்த அக்காலகட்டத்தில் தான், 2009ஆம் ஆண்டின் முற்பகுதியில், மிகக்குறுகிய காலகட்டத்திற்குள் அதிக தொகை மக்கள் இனஅழிப்பு செய்யப்பட்டார்கள்.

அதாவது ஆகக்கூடுதலான ஆசனங்களை தமிழர்கள் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் தான், அதிக தொகை தமிழ் மக்கள் இனஅழிப்பு செய்யப்பட்டார் கள். 22 ஆசனங்களினாலும் அந்த இன அழிப்பை தடுக்க முடியவில்லை. அது கூட்டமைப்பின் தோல்வியும் தான். அதற்கு கூட்டமைப்பு பொறுப்புக் கூறியதா?

2009க்குப்பின் கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் வெவ்வேறு வகைப்பட்ட வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றன. இவற்றில் இத்தனை நிறைவேற்றப்பட்டன? நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளுக்கு எந்தக் கட்சியாவது பொறுப்புக்கூறியதா? அவற்றை நிறை



வேற்ற முடியாமல் போனதற்கு மன்னிப்பு கேட்டதா? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தேசத்தைக் கட்டியெழுப்பும் வழியில் எதுவரை முன்னேறியுள்ளது? பரிகார நீதியை நோக்கி எதுவரை முன்னேறியுள்ளது? என்று தமிழ் மக்களுக்கு விளக்கம் கொடுக்குமா? இன அழிப்புக்கு எதிராக இலங்கை அரசைப் பொறுப்புக் கூற வைக்கும் விடயத்தில் ஏனைய கட்சிகளை விட தான் நேர்மையாகவும் துணிச்சலாகவும் உண்மையாகவும் நடப்பதாகக் கூறும் முன்னணி, அந்த விடயத்தில் கடந்த 15 ஆண்டுகளில் எதுவரை முன்னேறியிருக்கிறது என்பதனை தமிழ் மக்களுக்கு எடுத்து கூறுமா? தன்னுடைய சமரசத்துக்கு இடமற்ற வெளியுறவுக் கொள்கை காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் தான் பெற்றுக்கொண்ட வெற்றிகளைக் குறித்து அக்கட்சி தமிழ் மக்களுக்கு உண்மை நிலவரத்தை எடுத்துக் கூறுமா?

எல்லாருமே தமிழ் மக்களின் மறதியின் மீதே தமது தேர்தல் வெற்றிகளை முதலீடு செய்கிறார்களா? ஆம் கடந்த 15 ஆண்டுகளாக மட்டுமல்ல, அதற்கு முன்னரும் பொறுப்புக்கு கூறாமை என்பது தமிழ் அரசியலில் ஒரு பண்பாடாகவே வளர்ந்து விட்டது. தமிழ்க் கட்சித் தலைவர்களில் பலர் தமது தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் இயலாமைகளுக்கும் மன்னிப்புக் கேட்டதில்லை. அதாவது பொறுப்பு கூறியதில்லை.

ஆனால் கடந்த வாரம் தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் முன்னிலையில் மக்களுக்கு உண்மையை கூறினார்கள் பொறுப்புக் கூறினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஏப்ரல் மாத கடைசியில் உருவாகியது. அது பின்னர் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக்கூட்டமைப்பை உருவாக்கியது. அப்பொழுது கட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை முன் நிறுத்தியது. பொது வேட்பாளர் தமிழரசியலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற ஒருவராக மேலெழுந்தார்.

அரசற்ற சிறிய இனம் ஒன்று அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வித்தியாசமாக படைப்புத் திறனோடு, விவேகமாக, கையாள முடியும் என்பதற்கு பொது வேட்பாளர் ஒரு முன்னுதாரணம். அரசற்ற மக்கள், அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வெற்றிகரமாகக் கையாண்டு தமது கூட்டு விருப்பத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கும் அது ஒரு முன்னுதாரணம்.

ஆனால் அந்த வெற்றியைக் கொண்டாட முடியாத அளவுக்கு சில நாட்களிலேயே நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தமிழ்மக்கள் பொதுச்சபை தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என்று முடிவெடுத்தது. அதனால் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த இரண்டு கட்சிகள் கட்டமைப்பிலிருந்து விலகின. விளைவாக பொதுக் கட்டமைப்பு செயலிழந்தது.

தமிழ்மக்கள் பொதுச் சபையானது தொடர்ந்து பொதுக் கட்டமைப்பாக தேர்தலை எதிர்கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்பம் சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது. ஒரு வெற்றியை காட்டிய பொதுகட்டமைப்பு அடுத்த தேர்தலில் தங்களுக்கு வழி காட்டத் தவறி விட்டது என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச் சபைக்குள்ளும் இது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடந்தன.நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள வேண்டும் என்று ஒரு தரப்புக் கூறியது. ஆனால் தேர்தல்களை தொடர்ச்சியாக கையாள்வது ஒரு மக்கள் அமைப்பின் வேலை அல்ல என்று மற்றொரு தரப்புக் கூறியது. ஜனாதிபதித் தேர்தலை தேசத்தை திரட்டுவதற்கான ஒரு களமாக பயன் படுத்துவதே தமிழ் மக்கள் பொதுச் சபையின் இலக்காக இருந்தது. அதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான களநிலவரம் அத்தகையது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் அத்தகையது அல்ல. அங்கே கட்சிகளும் சுயேச்சைகளும் விருப்பு வாக்குகளும் வாக்காளர்களை சிதறடிக்கும். அதாவது தேசத்தைச் சிதறடிக்கும். எனவே தேசத்தைச் சிதறடிக்கும் ஒரு தேர்தல் களத்தில் தாமும் இறங்கி மக்களைச் சிதறடிக்க முடியாது என்று பொதுச் சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது.

மக்கள் அமைப்பில் காணப்படும் கடற் தொழிலாளர் சங்கங்களும் விவசாய அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள வேண்டும் என்று கேட்டன. பொதுச்சபை குறைந்த பட்சம் சுயேச்சையாகவாவது இறங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது தேர்தல்களால் மட்டும் செய்யக்கூடிய ஒன்று அல்ல. ஆகக்கூடிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் தான் ஆகப்பெரிய இனஅழிப்பு இடம்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



பெற்றது. எனவே தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது தேர்தல்களுக்கும் அப்பால் பரந்தகன்ற தளத்தில் பல்வேறு கட்டமைப்புகளுக்கூடாக செய்யப்பட வேண்டும் என்று பொதுச் சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது.

முடிவில் பொதுச்சபை தேர்தலில் பங்கெடுக்கவில்லை. அதனால் பொதுக் கட்டமைப்பும் செயலிழந்து போனது. பொதுச்சபை தேரைக் கொண்டுவந்து தெருவில் விட்டு விட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது.

அது தவறு. ஜனாதிபதித் தேர்தல் என்ற தேரை இழுத்த தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு அந்த தேரை தேர் முட்டிக்குள் தான் கொண்டு வந்து நிறுத்தியது. எனவே தேர் தெருவில் நிற்கிறது என்ற வாதம் சரியல்ல. மாறாக தொடர்ந்து தேர்தல் திருவிழாக்களை எதிர்கொள்ள தமிழ்மக்கள் பொதுச்சபை தயாரில்லை என்பது தான் உரிய விளக்கம் ஆகும்

இது தொடர்பான இருதரப்பு விவாதங்களிலும் ஆழமான ஓர் உண்மை உண்டு. ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஒரு தேர்தலாக அணுகவில்லை. அதற்குரிய அரசறிவியல் விளக்கத்தை அது கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்கம் வாக்களித்த மக்களை முழுமையாக சென்றடையவில்லை.

தமிழ்த் தேசிய வாக்காளர்கள் ஜனாதிபதி தேர்தலை ஒரு தேர்தலாகத் தான் பார்த்தார்கள். பெரும்பாலானவர்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பொழுது தமிழ் வாக்கு தமிழருக்கு என்று தான் சிந்தித்தார்கள். மாறாக தேர்தலை ஒரு தேர்தலாக கையாளாத களம் அது என்பது பெரும்பாலான வாக்காளர்களுக்கு விளங்கியிருக்க வில்லை. 50 நாட்களுக்குள் அந்த விளக்கத்தைக் கொடுக்கக்கூடிய சக்தி தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் பொதுக் கட்டமைப்புக்கும் இருக்கவில்லை. எனவே வாக்காளர் மனோநிலை என்பது தொடர்ந்து தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும் கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு காணப்பட்டது.

அதற்குக் காரணம் கட்சிகள் தான். மக்கள் ஒரு தலைமைத்துவ வெற்றிடத்தை உணர்கிறார்கள். ஏதாவது ஒரு கூட்டு அல்லது யாராவது தலைவர்கள் வந்து தங்களுக்கு ஒரு புதிய வழியைக் காட்ட மாட்டார்களா என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதனால் தான் கலகக்காரனாக மேலெழுந்த ஒரு மருத்துவரை ஒருபகுதி மக்கள் ஆர்வத்தோடு பார்த்தார்கள். அதனால் தான் ஜேவிபியின் எழுச்சியை ஒருபகுதி மக்கள் ஆர்வத்தோடு பார்க்கிறார்கள். அதனால் தான் தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பும் தமிழ்மக்கள் பொதுச் சபையும் (20ம் பக்கம் பார்க்க)

# விமல் வீரவன்ஸவும் தமிழ் அரசியல்வாதிகளும்

விமல் வீரவன்ச அறிவித்திருக்கிறார், தனது கட்சி தேர்தலில் போட்டியிடாது என்று. ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தலில் ஜேவிபி பெறக்கூடிய பெரும்பான்மையை பாதிக்கும் விதத்தில் அதற்கு எதிராக போட்டியிட்டு வாக்குகளைச் சிதறடிக்க அவர் விரும்பவில்லையாம்.

அவர் ஜேவிபியில் இருந்தவர். அதன் தீவிர இனவாத முகம். தனது தோழர்களின் வெற்றிக்காக வழி விடும் அவருடைய மேற்படி அறிவிப்புக் குறித்து அரசியல் வட்டாரங்களில் வேறு ஒரு விளக்கம் உண்டு. அவனுடைய மனைவி ஒரு வழக்கில் மாட்டுப்பட்டு இருக்கிறார். அந்த விவகாரத்தை மீண்டும் ஜேவிபியின் அரசாங்கம் கிளறி எடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு. அதனால் தான் ஜேவிபியை சந்தோஷப்படுத்த விமல் அவ்வாறு அறிவித்திருக்கிறார் என்பது ஒரு விளக்கம்.

எனினும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் விமல் வீரவன்சவின் அறிவிப்பை ஆர்வத்தோடு பார்க்கின்றார்கள். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கட்சிகள் எப்படியெல்லாம் ஐக்கியப்படலாம் என்று அவர்கள் வியப்போடு பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் கட்சிகளின் நிலை இம்முறை எவ்வாறு காணப்படுகிறது என்றும் அவர்கள் ஒப்பிட்டுக் கவலைப்படுகிறார்கள்.

இம்முறை யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனங்களுக்கு 396 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். வன்னியில் ஆறு ஆசனங்களுக்கு 459 வேட்பாளர்கள். மட்டக்களப்பில் ஐந்து ஆசனங்களுக்கு 392 வேட்பாளர்கள். திருகோணமலையில் நான்கு ஆசனங்களுக்கு 217 வேட்பாளர்கள். அம்பாறையில் ஏழு ஆசனங்களுக்கு 640 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இது வடக்கு கிழக்கில் போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் தொகை குறித்த ஒரு புள்ளிவிபரம். இந்தப் புள்ளி விபரம் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்படுகிறது. தமிழ் மக்கள் ஒற்றுமை இல்லாதவர்கள், தங்களுக்குள் அடிபடுகிறார்கள், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகளும் சுயேட்சைகளும் தமிழ் வாக்குகளை சிதறடிக்கப் போகின்றன... என்றெல்லாம் எழுதப்படுகின்றது.

உண்மை. தமிழ் வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தலில் சிதறடிக்கப்பட போவது உண்மை. ஆனால் அது இந்த முறை மட்டும் நிகழவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த பெரும்பாலான நாடாளுமன்ற தேர்தல்களில் இந்த நிலைமை படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் கூட்டமைப்பு உடைந்துடைந்து தமிழரசுக் கட்சியாகி விட்டது. தமிழரசுக் கட்சிக்குள் இருந்து வெளியேறிய பங்காளி கட்சிகள் தங்களுக்கு இடையே குத்துவிளக்கு கூட்டணி ஒன்றை உருவாக்கின.

அது ஒரு பலமான கூட்டணி என்ற நம்பிக்கை இனிமேல் தான் ஏற்பட வேண்டும். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் உடைவு ஏற்பட்டது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குள் உடைவு ஏற்பட்டிருக்கிறது. இந்த உடைவுகளின் விளைவாகவும் அதிகரித்த தொகை கட்சிகளும் சுயேச்சைகளும் அரங்கில் காணப்படுகின்றன.

ஒரு சிறிய அரசற்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் இவ்வளவு தொகை கட்சிகளும் சுயேச்சைகளும் காணப்படுவது என்பது தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவைக் காட்டுகின்றது. இந்த சீரழிவில் இருந்து தமிழ் அரசியலை மீட்பதற்காகத் தான் ஒரு பொது



வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தப்பட்டார். ஆனால் பொது வேட்பாளரை நிறுத்திய பொதுக் கட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலோடு செயலிழந்து விட்டது. அது நாடாளுமன்ற தேர்தலில் செயற்படவில்லை. அது போன்ற ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று பரவலான எதிர்பார்ப்பு மக்கள் மத்தியிலும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் உண்டு. அந்த எதிர்பார்ப்பை மேலும் சரியான வார்த்தைகளில் சொன்னால் தமிழ் தேசிய அரங்கில் காணப்படும் எல்லாத் தரப்புகளையும் ஆகக்கூடிய பட்ஷம் ஓரணியாகத் திரட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. அவ்வாறு திரட்டுவதற்கான முயற்சிகள் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிவில் சமூகங்கள், மக்கள் அமைப்புக்கள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல தரப்புக்களும் அந்த முயற்சியில் ஈடுபட்டு தற்காலிக வெற்றிகளை பெற்றிருக்கிறார்கள். அவை நிரந்தர வெற்றிகளாக அமையவில்லை.

ஒரு பொது வேட்பாளர் நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பும் இப்பொழுது செயலிழந்து விட்டது. பொதுக்கட்டமைப்பு எனப்படுவது மக்கள் அமைப்பும் கட்சிகளும் இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. அது கடந்த நான்கு தசாப்த காலத்தில் உருவாக்கப்பட்ட ஆகப் பிந்திய, சாத்தியமான ஒற்றுமைக்கான ஒரு இடையூடாட்டத் தளம் ஆகும். அதை நிரந்தரமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு கட்சிகளிடமும் இருந்தது தமிழ் மக்கள் பொதுச்சபையிடமும் இருந்தது. ஆனால் அது சாத்தியமாகவில்லை.

தமிழ் மக்கள் பொதுச்சபை தேர்தலில் பங்குபற்றாமல் விட்டதால் அது செயலிழந்தது என்று கூற முடியாது.சங்குச் சின்னத்தை குத்துவிளக்குக் கூட்டணி வசப்படுத்தியது அதற்கு ஒரு முக்கிய காரணம். ஐக்கியத்திற்கான எழுதப்பட்ட ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை கட்சிகள் தமக்கு வசதியாக வியாக்கியானம் செய்த பொழுது, தமிழ் மக்கள் பொதுச்சபையானது கட்சிகளிடமிருந்து விலகத் தொடங்கியது. பொதுக் கட்டமைப்பாக தேர்தலை எதிர்கொண்டால், தாங்களும் இணைந்து செயல்படுவோம் என்று பசுமை இயக்க கட்சியும் மான் கட்சியும் ஏற்கனவே தெரிவித்திருந்தன. தமிழ் மக்கள் பொதுச்சபை தேர்தலில் நேரடியாக பங்கேற்க விட்டாலும் ஐக்கியத்திற்கான அந்த கட்டமைப்பை தொடர்ந்து பாதுகாப்பதற்கு அந்த மக்கள் அமைப்பு தயாராக இருந்திருந்தால், பசுமை இயக்கமும் மான் கட்சியும் தொடர்ந்து அந்த கட்டமைப்புக்குள் ஒன்றாக இருந்து தேர்தலை எதிர் கொண்டு இருந்திருக்கும். ஆனால் சங்குச் சின்னம் விவகாரமாகிய பின் ஐக்கியத்துக்கான தார்மீகத் தளம் ஆட்டம் கண்டது. அதன் விளைவாக பொதுக் கட்டமைப்பு செயலிழந்தது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தொடர்ந்து செயற்பட்டிருந்தால் இப்பொழுது அரங்கில் காணப்படும் ஆகக் குறைந்தது மூன்று சுயேட்சைகள் அந்தக் கட்டமைப்புக்குள் நின்று போட்டியிட்டிருந்திருக்கும். ஏனைய சுயேச்சைகளையும் தமிழ் மக்கள் பொதுச்சபை அந்தக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்திருக்கும். அந்தக் கூட்டு ஒப்பீட்டளவில் பெரியதாகவும் ஏனைய இரண்டு கட்சிகளுக்கும் சவால்கள் மிகுந்ததாகவும் அமைந்திருக்கும்.


சில மாதங்களுக்கு முன்பு தமிழ்ப் பொது வேட்பாளருக்காக மக்கள் அமைப்பு கட்சிகளை சந்தித்தது. அப்பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த ஒரு பிரமுகர் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளிடம் பின்வருமாறு சொன்னார் இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றால் இப்பொழுது எங்களிடம் இருக்கும் இரண்டு ஆசனங்களையும் நாங்கள் இழந்து விடுவோம் என்பது எங்களுக்குத் தெரியும் என்று.

பொதுக் கட்டமைப்பை பகை நிலையில் வைத்து பார்த்து கூறப்பட்ட வாக்கியம் அது. ஆனால் பொதுக் கட்டமைப்பு எல்லா கட்சிகளுக்குமான திறந்த, நெகிழ்ச்சியான ஒரு கட்டமைப்பாகக் காணப்பட்டது. அதனை அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் சென்றிருந்தால் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் வாக்குகள் சிதறுவதை தடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்திருக்கும்.

உதாரணமாக, திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பொதுச்சபையின் முக்கியஸ்தர்களில் ஒருவராகிய மறை மாவட்ட ஆயர் தலைமையில் கட்சிகளுக்கு இடையே பகை தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது ஒரு வித்தியாசமான கூட்டு. அங்கே சங்கும் வீடும் ஒன்றாக நிற்கின்றன. ஆனால் வீட்டுச் சின்னத்தின் கீழ் நிற்கின்றன.

அது போன்ற ஒரு முயற்சி அம்பாறையிலும் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் வெற்றி கிடைக்கவில்லை. அதற்கு (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# தமிழ் மக்களை சீரழித்த தமிழ்த்தேசியக் கட்சிகள்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



பாராளுமன்றத் தேர்தல் தமிழ்பேசும் சமூகங்களைத் தடுமாற வைத்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டதையும் விட தேசிய மக்கள் சக்திக்கான (NPP அல்லது AKD) ஆதரவு அலை அதிகமாகக் காணப்படுகிறது. யாரைப் பார்த்தாலும் தேசிய மக்கள் சக்தி (NPP அல்லதுAKD)யைப் பற்றியே பேசுகிறார்கள். மாற்றத்துக்கு ஒரு வாய்ப்பளித்தால் என்ன?என்று கேட்கிறார்கள்.



இது தமிழ்த்தேசியவாதச் சக்திகள் சற்றும் எதிர்பார்த்திருக்காத நிலையாகும். இப்படியொரு பேரலை வந்து தம்மைத் தாக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. இந்த அதிர்ச்சி இரண்டு வகைப்பட்டது.

ஒன்று, தேசிய மக்கள் சக்தி என்பது இடதுசாரித்தனமுடையது என்பதால், அதை ஏற்றுக் கொள்வதில் உள்ள தயக்கம். ஏனென்றால் தமிழ்ப் பெருந்திரளுக்கு இடதுசாரிகள், மாக்ஸிஸ்டுகள் என்றால் எப்போதுமே சற்றுக் கசப்பும் இளக்காரமுமுண்டு. அதனால் இடதுசாரிகளைத் தள்ளித் தூரத்தில் வைத்துக் கொள்வார்கள். அதை மீறித் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக மக்கள் திரும்புவதை எப்படி ஏற்றுக் கொள்வது, அனுமதிப்பது என்ற சிக்கல்.

இரண்டாவது, தேசமாகத் திரள்வோம், தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்துவோம், தமிழ்த் தேசியக் கூட்டுணர்வை திரட்டுவோம் என்பதற்கு மாறாக அதை விட்டு விலகி, தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரள்வது.

இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் எதிர்ப் பரப்புரையைச் செய்ய முடியாமல் தடுமாறுகின்றன தமிழ்த்தேசியத் தரப்புகள்.

இப்போதுள்ள நிலையில் வடக்குக் கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கும் தமிழ்த்தரப்புகளுக்குமிடையில் தான் போட்டி. அதிலும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி வாய்ப்பை அதிகமாகக் கொண்டுள்ளது. மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில்தான் தேசிய மக்கள் சக்தி — ஐக்கிய மக்கள் சக்தி தமிழ்த்தேசியத் தரப்புகள் ஆகியவற்றுக்கிடையிலான முத்தரப்புப் போட்டியுண்டு. இந்தப் போட்டிக் களத்தைச் சமாளித்து வெற்றியடைவதற்கு தமிழ்த்தேசியவாதச் சக்திகளிடத்தில் எந்தக் கைப்பொருளுமில்லை. மெய்ப்பொருளும் கிடையாது.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியும் எதிர்பார்த்திராத ஒருஆதரவு நிலையை வடக்குக் கிழக்கில் பெற்றுள்ளது. அது வடக்குக் கிழக்கில் தன்னுடைய செல்வாக்குப் பரப்பைச் சரியாக விரிக்காமலே, தன்னுடைய வேலைத்திட்டங்களையும் ஆட்களையும் உருவாக்காமலே பெறுகின்ற ஆதரவாகவும் வெற்றியாகவும் இருக்கப் போகிறது.

இதற்குக் காரணம், கேள்விக்கிடமில்லாத வகையில் தமிழ்த்தேசியவாதச் சக்திகள் நடத்திய பொய் (மாயை) அரசியலின் விளைவேயாகும். தமிழ்த்தேசியவாத சக்திகளின் பலவீனம் தேசிய மக்கள் சக்திக்கான வாய்ப்பை அளித்துள்ளது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். ஆனால், அதை தமிழ்த்தேசியவாத சக்திகள் வேறுவிதமாக உணர்ந்திருந்தன.

தேசிய மக்கள் சக்தியை விட அரச ஆதரவுத் தரப்புகளான ஐ.தே.க அல்லது பொதுஜன பெரமுன அல்லது சு.க போன்றவை தான் தமக்குச் சவாலாக இருக்கும் என. அல்லது, அவற்றின் ஏஜென்டுகளாகத் தொழிற்படும் தமிழ்ச் சக்திகளே தமிழ்த்தேசிவாத சக்திகளுக்குப் போட்டியாக இருக்கும் என. என்பதால் தான் அவை முன்னேற்பாடாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த முற்பட்டதாகும்.

இப்பொழுது நிலைமை முற்றிலும் வேறாகி விட்டது. அது யாராலும் கட்டுப்படுத்த முடியாத, கையாளவே முடியாத கட்டத்துக்குச் சென்று விட்டது. இனி நடப்பதைக் காண வேண்டியதுதான் என்ற கட்டத்துக்கு வந்திருக்கிறது.

இந்த நிலைக்குக் காரணம், 2009க்குப் பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் (தமிழரசுக் கட்சி) அதிலிருந்து பிரிந்து சென்ற பிற தரப்பினரும் மக்களுக்கான அரசியலைச் செய்யவே இல்லை. இவை செய்ததெல்லாம் அரச எதிர்ப்பை மையப்படுத்திய வெறும் வாய்ச்சவாடல் அரசியல் தான். அடுத்தது, தமக்கிடையிலான உள்மோதல். வாய்ச்சவாடல் அரசியலை தேர்தற் பரப்புரை தொடக்கம் பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றம் வலையில் தொடர்ந்தனர். போதாக்குறைக்கு ஊடக அறிக்கைகளிலும் ஊடகச் சந்திப்புகளிலும் அவற்றை நிகழ்த்தினர். அதற்கு அப்பால் மக்களுடைய பிரச்சினைகளுக்கான போராட்டங்களில் இவற்றின் பங்கேற்பு குறைவு. அல்லது இல்லை எனலாம்.

தொடக்கத்தில் சில போராட்டங்களில் தலையைக் காட்டினார்கள். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுடைய போராட்டம், மீள்குடியேறும் மக்களுடைய போராட்டம் (வலி வடக்கு — கேப்பாப்பிலவு) நில அளவீட்டுக்கு எதிரான போராட்டம், அரசியற் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம், நில அபகரிப்பு — பௌத்த மயமாக்கலுக்கு எதிரான போராட்டம் போன்றவற்றில்.

இது கூட சம்பிரதாயமான எதிர்ப்பாக பங்கு பற்றுதலாக இருந்ததே தவிர, இவற்றைத் தீவிரப்படுத்தி, மக்கள் போராட்டமாக எந்தச் சக்தியும் முன்னெடுக்கவில்லை. அதற்கான உழைப்போ, அர்ப்பணிப்போ எந்தத் தரப்பிடமும் இருக்கவில்லை. எந்த அரசியல்வாதியும் போராட்டங்களின் அடையாளமாக முகிழ்க்கவில்லை.

இதனால் இவர்கள் தேர்தற் காலங்களில் முன்மொழிந்த எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காண முடியாமற் போய் விட்டது. பதிலாகப் புதிய பிரச்சினைகள் உற்பத்தியாகின. ஆக எதிர்ப்பு அரசியல் என்பது சனங்களுக்கு நெருக்கடியைத் தரும் ஒன்றாக மாறியதே தவிர, அரசுக்கு அது எந்த நெருக்கடியையும் நிர்ப்பந்தத்தையும் வழங்கவில்லை.


மட்டுமல்ல, இந்தத் தரப்புகள் சொன்னதைப் போல பிராந்திய சக்தியாகிய இந்தியாவையோ சர்வதேச சக்திகளான சீனா மற்றும் மேற்குலகத்தையோ வென்றெடுக்கவும் இல்லை. சீனாவுடன் தமிழ்த்தேசியத் தரப்புகள் நேரடியாகவே மோதிக்கொண்டன.

எனவே எதிர்ப்பு அரசியலில் மக்கள் ஏமாற்றமே அடைந்தனர். அதாவது தமிழ்த்தேசிய அரசியலில் சலித்தனர். யாரை நம்புவது? யாரை ஏற்றுக் கொள்வது? என்று பகிரங்கமாகவே பலரும் சொல்வதைக் கேட்கலாம். மாற்றுத் தெரிவுகள் இல்லை என்ற நிலையில் தான் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் மக்கள் தெரிவு செய்தனர் ஏற்றனர். இனியும் அதைச் செய்ய முடியாது என்பதே மக்களின் இன்றைய நிலைப்பாடாகும். ஆனால், இதைக் கவனத்திற் கொள்ளத் தயாரற்ற தமிழ்த்தேசியவாதச் சக்திகள், இன்னொரு நிலையில் இதை இந்தப் பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்கும் தமக்கிடையில் அதிகாரத்தை முன்னிலைப்படுத்திக் கொள்வதற்கும் தமக்குள் மோதிக் கொண்டன. இதற்காக அவர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினர். ஒரு கட்டத்தில் இது வளர்ச்சியடைந்து இரண்டு அணிகளாகத்

(22ம் பக்கம் பார்க்க)




# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120873 (F)** 25yrs, 5'4" , Annulled , Not Specified , N/A Sevai , Bachelors.. , ECA , Canada

**ID08120861 (F)** 33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120858 (F)** 31yrs, 5'3" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Health network , Canada

**ID08120728 (F)** 40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120718 (F)** 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120711 (F)** 30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120803 (F)** 21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120806 (F)** 27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120809 (F)** 32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120804 (F)** 29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120869 (F)** 40yrs, 5'3" , Single , Aayilyam , N/A Sevai , High School , Sales Excutive , Sri Lanka

**ID08120860 (F)** 29yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120857 (F)** 33yrs, 5'6" , Single , Swaathi , 2 Sevai , Masters Degree , Project manager , Canada

**ID08120727 (F)** 24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120685 (F)** 22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120667 (F)** 25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120804 (F)** 29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120807 (F)** 27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120822 (F)** 22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120799 (F)** 5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120868 (F)** 42yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Pharmacy , Sri Lanka

**ID08120859 (F)** 33yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120856 (F)** 23yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120723 (F)** 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120650 (F)** 26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120650 (F)** 26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120805 (F)** 30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120808 (F)** 31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120830 (F)** 28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120795 (F)** 31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

## மணமகன்



**ID08120874 (M)** 35yrs, 5'8" , Not Specified , Not Specified , N/A Sevai , Diploma , Tourism , United States

**ID08120866 (M)** 24yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120862 (M)** 28yrs, 5'7" , Single , Revathi , N/A Sevai , Masters Degree , Work , Canada

**ID08120717 (M)** 33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120613 (M)** 32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120270 (M)** 34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120810 (M)** 42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120814 (M)** 43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120818 (M)** 36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120829 (M)** 38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120870 (M)** 29yrs, 5'8" , Single , Makam , 8 Sevai , High School , Work , Sri Lanka

**ID08120864 (M)** 34yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120855 (M)** 29yrs, 5'6" , Single , Not Available , N/A Sevai , High School , It , Sri Lanka

**ID08120715 (M)** 27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120474 (M)** 28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08119698 (M)** 33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120812 (M)** 32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120816 (M)** 22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120820 (M)** 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120786 (M)** 36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120867 (M)** 39yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Architect , Canada

**ID08120863 (M)** 32yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Own business , Canada

**ID08120850 (M)** 33yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , RCMP , Cambodia

**ID08120709 (M)** 38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120335 (M)** 30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120730 (M)** 28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120813 (M)** 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120817 (M)** 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120821 (M)** 30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120710 (M)** 22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# தாயக அரசியலை தத்தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பும் புலம்பெயர் நிதி வழங்குனர்கள்

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் நேரடிக் காலனித்துவ ஆட்சி உலகில் மறைந்துவிட்டபோதிலும் இன்றும் உலகில் முன்னேறிய நாடுகள் பல தத்தமது நோக்கங்களுக்காக ஏனைய நாடுகளை பல்வேறு வழிகளில் மறைமுகமாக நவகாலனித்துவ முறையில் தமது கட்டுப்பாட்டுக்குள் அல்லது சார்பு நிலையில் வைத்திருப்பதையும் வைத்திருக்க முயல்வதையும் காண முடியும். இதற்கு அந்நாடுகள் பொருளாதார காரணிகளை பிரதான வழிமுறையாகக் கையாண்டாலும் மறைமுகமான, சிலவேளைகளில் நேரடியான அரசியல் தலையீடுகள் மூலமும் இதனைச் சாதிக்க முனைகின்றன.

தமக்குச் சார்பான ஆட்சியாளர்களை அதிகாரத்தில் கொண்டு வர முனைவது போலவே முரண்டு பிடிப்போரை அதிகாரத்திலிருந்து அகற்றுதல், சில வேளைகளில் அவர்களை படுகொலை செய்தல் என்பனவும் அவ்வழி முறைகளுக்குள் அடங்கும். இன்று பெரும்பாலான நாடுகளில் ஜனநாயகமுறைத் தேர்தல்கள் மூலம் ஆட்சித் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவதால் தமக்குச் சார்பானவர்களை வெற்றி பெறச் செய்வதற்கு இந்நாடுகள் பல்வேறு உபாயங்களைக் கையாளுகின்றன. அதிலொன்று தேர்தல் செலவுகளுக்காக குறித்த நபருக்கு அல்லது கட்சிக்கு நிதியை வாரி வழங்குவது.

இலங்கை வரலாற்றிலும் இது நிகழ்ந்தே வந்தாலும் அது தொடர்பான தகவல்கள் அரிதாகவே வெளி வருகின்றன. 2015இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பதவியிலமர்த்துவதற்காக சீனா பல கோடி யுவான்களை வழங்கியதான செய்திகள் வெளிவந்ததைப் போலவே 'அரகலய' போராட்டத்துக்கு பின்புலத்தில் மேற்குலகம் இருந்தது என்ற செய்திகளும் வெளி வந்திருந்தன.

அதேபோல அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பை வெற்றி பெறச் செய்வதற்கான முறைகேடுகளில் ரஸ்யா ஈடுபட்டதான குற்றச்சாட்டும் உண்டு. 2005இல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகள் மகிந்தவிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வடக்கு- கிழக்கில் பகிஷ்கரிப்பினூடாக ரணிலைத் தோல்வியடையச் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு. நாடுகளுக்கிடையில் இவ்வாறு நடப்பதை ஒத்த செயற்பாடுகள் இன்று ஈழத் தமிழ் மக்களின் அரசியலிலும் வேறொரு வடிவில் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

குறிப்பாக 2009ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவுக்கு வந்ததிலிருந்து இன்று வரை இலங்கையில் நடந்த அத்தனை தேர்தல்களிலும் அரசியல் கட்சிகளுக்கு கணிசமான நிதி புலம்பெயர் நாடுகளிலிருந்து உட்பாய்ந்த வண்ணமே உள்ளது. ஆரம்ப காலத்தில் இது ஒரு உதவியாகவே கருதப்பட்டாலும் இன்று பல்வேறு வழிகளில் விரிவடைந்து தமிழ் மக்களின் அரசியலைத் தூரவிருந்தே இயக்கும் ஒரு நிலைக்கு அது பரிணாம வளர்ச்சியடைந்து விட்டதை அவதானிக்க முடிகிறது.

அதாவது தேர்தல் மற்றும் பிற செயற்பாடுகளுக்கு நிதி வழங்குவதன் மூலம் நிதி வழங்கும் புலம்பெயர் சக்திகள் தாயகத்தின் அரசியலை அது விருப்பத்துக்கு இயக்கும் நிலை வளர்ந்து வருகிறது. இதனால் இன்னுஞ் சிறிது காலத்தில் இங்குள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் புலம்பெயர் நாடுகளில் இருந்து எம்மவர் சிலரால் இயக்கப்படும் ரோபோக்களாக மாறி விடுவார்களோ என்ற ஐயம் மக்கள் மத்தியில் இன்று பரவலாக எழத் தொடங்கி விட்டது.

இதனால் ஏலவே பலவீனமடைந்துள்ள தமிழ் மக்களின் அரசியலை மேலும் படுகுழிக்குள் தள்ளுவதற்கான மோசமான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளது. தொடக்கத்தில் தமிழ் அரசியல் கட்சி என்ற வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே புலம் பெயர்ந்தவர்களிடமிருந்து பணம் அனுப்பப்பட்டது. குறிப்பாகத் தமிழரசுக்கட்சியின் கனடாக்கிளையினர் சகல தேர்தலுக்கும் அக்கட்சிக்குப் பணம் திரட்டி அனுப்பி வைத்தனர். இதில் அதிகம் பாடுபட்ட திருகோணமலைக் குகதாசன் தான் தமிழரசுத் தலைவர்களின் பேச்சை நம்பி இலங்கை வந்து இன்று ஓரங்கட்டப்பட்டு நிற்பவர் என்பது பலரும் அறிந்த ஒன்று.



பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். ரெலோ போன்ற கட்சிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அக்கட்சிகளின் வெளிநாட்டுக் கிளை என்ற பெயரில் பணத்தைத் திரட்டி அக்கட்சிகளின் தேர்தல் செலவுகளுக்கு அனுப்பத் தொடங்கினர். இந்நிதி வரையறுக்கப்பட்ட தொகை மற்றும் தேர்தல் காலச் செலவுகளுக்கான ஒரு ஆதரவு என்ற வகையில் பிரச்சினைக்குரியதாக இருந்ததில்லை என்பதுடன், அவ்வாறு நிதி வழங்கியோர் கட்சிகளின் தீர்மானங்களில் தலையிட்டதுமில்லை.

ஆனால் அண்மைக் காலங்களில் தேர்தல்கள், போராட்டங்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கும் யார் யாரிடமிருந்தோ இங்கு எவரெவர்க்கோ பணம் கைமாற்றப்படுவதுடன், அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் நிலையும் அதிகரித்து வருகிறது. நாங்கள் பணம் அனுப்புகிறோம் நீங்கள் இதைச் செய்யுங்கள் என்ற வகையிலான கட்டளைகள் கூட சில சந்தர்ப்பங்களில் பிறப்பிக்கப்படுவதை அறிய முடிகிறது.

இங்கு இது போன்று புலம்பெயர்ந்தவர்களால் பணம் அனுப்பப்படுவது அல்லது இங்குள்ள கட்சிகளின் தலைவர்களோ, குழுக்களோ அதனைப் பெற்றுக் கொள்வது பிரச்சினையன்று. ஆனால் அவை என்ன நோக்கங்களுக்காக யாரால் அனுப்பப்படுகின்றன என்பதை ஆராயும்போதே தமிழரின் எதிர்கால அரசியல் தொடர்பான கவலைகள் மக்களிடையே அதிகரிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு பணம் அனுப்புபவர்கள் யாரெனப் பார்த்தால் முன்னாள் போராளிகள், குறிப்பாக விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த அமைப்புகள் அல்லது அவர்களது செயற்பாடுகளுடன் இணைந்திருந்தவர்கள், அவர்களின் பெயரைச் சொல்லிக் காரியமாற்றுபவர்கள், புலம் பெயர்ந்தோர் சமூக அமைப்புகள், தனிமனிதர்கள், குழுக்கள் என விரிந்து செல்லும். இவர்களில் பலர் அல்லது சில அமைப்புகள் அரசியல் தேவைகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கு, குறிப்பாக யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கும் போராளிகளுக்கும் அதிகளவு நலன்புரி உதவி செய்பவர்களாகவும் உள்ளனர். ஆனால் இங்குள்ள முக்கிய பிரச்சினை என்னவென்றால், இவர்களுக்கிடையில் ஒத்த கொள்கைகளோ, பொதுவான நோக்கங்களோ, ஒருங்கிணைப்புகளோ அதிகம் இருப்பதில்லை. பதிலாகத் தனியன்களாகவும் எதிரெதிர் செயற்பாடுகளை ஊக்குவிப்பவர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது. புலம்பெயர் நாடுகளில்



எவ்வாறு பிரிந்திருக்கிறார்களோ அவ்வாறே இங்கும் மக்களையும் அரசியல் தலைவர்களையும் பிரிப்பவர்களாகவும் அவர்களை அரசியல் எதிரிகளாக மாற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

13ஐ ஆதரிக்கும் கட்சிகளுக்கு ஒரு தரப்பு நிதி வழங்குகிறது. அதை எதிர்க்கும் கட்சிக்கு இன்னொரு தரப்பு நிதி வழங்குகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு சில தரப்புகள் ஆதரவளிக்கின்றன. மறுபுறத்தில் வேறுதரப்புகள் அதனை எதிர்ப்பதற்காக உதவுகின்றன. இதில் ஒரு சில தரப்புகள் ஆதரிக்கும் எதிர்க்கும் இரண்டு தரப்புகளுக்கும் வேறுபட்ட மூலங்களினூடாக நிதி வழங்கி கூத்துப்பார்க்க விரும்புகின்றன. தேர்தல் செலவுகளுக்கு மட்டுமன்றி உரிமைகளுக்கான மக்கள் போராட்டங்களிலும் இதே நிலைமைகளை ஊக்குவிக்கின்றனர்.

இதன் மூலம் ஒன்றுபட்டு நிற்கும் அமைப்புகளை பிரிக்கவும் முயற்சிக்கின்றனர். இதற்கு நல்ல உதாரணம், ஒன்றுபட்டு நின்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அமைப்பை இரண்டாகப் பிளந்து அதனைப் பலவீனமாக் கியது. ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றாக இணைந்து செயற்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தலிலும் இணைந்து போட்டியிடுவது என்று முதலில் எடுத்த தீர்மானத்தை பின்னர் மறுதலித்தமைக்கு நிதி வழங்கிய புலம்பெயர் தரப்புகள், சிவில் அமைப்புகளின் மீது பிரயோகித்த அழுத்தமே காரணமென சில அரசியல் தலைவர்கள் குற்றஞ் சாட்டு



கட்டுரையாளர்:-
மூத்த அரசியலாளர்
- அருந்தவபாலன் -

வதையும் காணமுடிகிறது. இன்று கட்சிகளின் வேட்பாளர்களாக யாரைப் போடவேண்டும், யாரைப் போடக்கூடாது என்பதையும் அவர்களே தீர்மானிக்கின்றனர்.

பல சுயேட்சைக் குழுக்களின் பிறப்புக்குப் பின்னாலும் அவர்களே உள்ளனர். முன்னாள் போராளிகள் அல்லது போராட்டத்துடன் இணைந்திருந்த அமைப்புகள் அல்லது சமூக அமைப்புகள் என்றாலும் ஒவ்வொன்றும் வேறான முரண்பட்ட நோக்கங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நிதி வழங்கி ஊக்குவிப்பது ஆச்சரியமானது மட்டுமன்றி கவலைப்பட வேண்டியதுமாகும்.

இத்தகைய தவறான விருத்தியின் இன்னொரு பரிணாம வளர்ச்சியாகக் கருதப்படுவது புலம்பெயர் தமிழ் தொழிலதிபரொருவர் தமிழர் அரசியலை முழுமையாகக் குத்தகை எடுக்கவிருப்பதாக வரும் செய்திகளாகும். நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சில கட்சிகளையும் தலைவர்களையும் இணைத்து புதியவர்களையும் உள்வாங்கி புதிய கட்சியொன்றின் பெயரில் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களில் பரந்தளவில் தேர்தலில் ஈடுபடுத்துவதற்கு குறித்த தொழிலதிபர் எண்ணியதாகவும் காலம் போதாமையால் அதனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு தற்போது தேர்தலில் இறங்கும் சில கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் நிதி வழங்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதாகவும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

புதிய கட்சி தொடர்பாக ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர்கள் சிலருடனும் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த ஒருவருடனும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிலருடனும் கட்சி சாராத சில முக்கிய பிரமுகர்களுடனும் தொடக்கக் கட்ட பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவர்களுள் தற்போது தேர்தலில் போட்டியிடுவோர்க்கு நிதி வழங்கப்பட்டதாகவும் சித்தார்த்தன், சிறிகாந்தா போன்றவர்கள் அதை நிராகரித்து விட்டதாகவும் அறியக் கிடைக்கிறது.

இவரைப் போன்ற பெரும் வர்த்தகப் புள்ளிகள் தங்கள் தொழில் நிறுவனங்களின் பாதுகாப்புக் கருதியும் சலுகைகளுக்காகவும் அரசியல் தலைவர்களின் தேர்தல் செலவுகளுக்காக நிதி வழங்குவது வழமை. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில், சஜித்துக்கு மட்டுமல்ல மாற்றத்துக்கான வேட்பாளர் அனுர வுக்கும் (22ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு!

(9ம் பக்கத் தொடர்ச்சி) என்னவோ? ஏதோ? தவராஜா கேட்டதில் மட்டும் தவறில்லை என்றே தோன்றுகிறது.

ஒரு பதவிக்கான இன்ரவியுவை நடத் தும் ஒருவர், தனக்கென்று ஒரு பதவியை எடுத்துக் கொள்வது எப்படி நியாயமாகும்?.

உலகநீதி பேணுவதற்காக வேனும், தாம் தேர்வுக்குழுவில் இருப்பதைத் தவிர்த்து, தம் ஆதரவுத் தலையாட்டி கள் சில பேரைத் தேர்வுக் குழுவாக்கி, தமது நோக்கத்தை அவர்கள் மூலம் நிறைவேற்றியிருக்கலாம். பொய்மை யாக இருந்தாலும், நீதி பேணிய தன்மையாவது அதில் காப்பாற்றப் பட்டிருக்கும்.

அதுவன்றித் தமக்கான 'சீற்'றுகளைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்பவர்கள், மற்றவர்களுக்கான தேர்வினை நடத்து வது, மாபெரிய ஜனநாயகத் தவறு தான் என்பதை நானும் ஏற்றுக் கொள் கிறேன்.

தடி எடுத்தவன் எல்லாம் தண்டற் காரன் எனுமாற் போல, உங்கள் கட்சி யில் ஆதரவுக்கரம் ஓங்கியவர்கள் எதை நினைத்தாலும் செய்ய முடிகிறது. வெட்கக்கேடு!.

எது எப்படியோ? ஓர் முக்கியமான தேர்தலுக்கு, முக்கியமான சூழ்நிலை யில் உங்கள் கட்சி முகம் கொடுக்கப் போவதை நீங்கள் அனைவரும் உண ர்ந்திருக்கிறீர்களா? என்பது கூடத் தெரியவில்லை.

உங்கள் அணியை ஓரளவு சரிசமமாய் எதிர் கொண்டு நின்ற சைக்கிள்க் கட்சி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் உடல்நலப் பாதிப்பால் இன்று சற்று வலுவிழந்து போயிரு க்கிறது. அவருக்குப் பின் அவரள வான வலிமையுள்ளவர் எவரும் அக் கட்சியில் இல்லை என்பது பெரும் குறைபாடு. ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவை தெற்கிலேயே நலிவடைந்து விட்டன. அவர்களால், வரும் தேர்தலில் வடக் கில் நின்று பிடிக்க முடியப்போவ தில்லை என்பது மட்டும் நிச்சயம்.

டக்ளஸ்'' வழக்கம் போல தனக்கான பகுதிகளை வென்றெடுப்பார். மற்றும் படிக்கு ஒட்டு மொத்தமாய் அவர் உங்களைப் பாதிக்கப் போவதில்லை.

சென்றமுறை போல, வேலை வாங்கித் தருகிறேன், அது தருகிறேன், இது தருகிறேன் என்றெல்லாம் புளுகுகளை அவிழ்த்து விட்டு, இந்த முறை வெற்றி பெறவும் எவருக்கும் வாய்ப் பிருக்கப் போவதில்லை.

நலிவுற்ற சங்குக் கட்சிக்காரர்கள், தமக்குத் தாமே சங்கு ஊதுவர்கள் போல்த் தான் தெரிகிறது. பார் புகழ் கொண்ட முன்னாள் முதலமைச்சரின் 'மான்' அணியும், துள்ளிப் பாய்ந்து இனி மக்கள் மத்தியில் தலையெடு ப்பது கொஞ்சம் கஷ்டம் தான் என்றே நினைக்கிறேன்.

இம்முறை அருச்சுனாவும் ஆள நினைத்து ஓர் அணியை இறக்கியிரு க்கிறார். அது பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. அவ ரது வாயே அவர் அணியை வலு விழக்கச் செய்து விடும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் அணியின் கோரிக்கையை ஏற்றுப் பெரும்பான்மையான தமிழ் மக்கள், சஜித்துக்கு வாக்களித்தமையைப் பார்க்கின்ற போது, இத்தனை கோளாறு களுக்குப் பின்னும், மக்கள் இன்னும் உங்களின் தமிழரசுக் கட்சியைத் தான் நம்புகிறார்கள் போற் தெரிகிறது. அத னால், இம்முறை உங்களுக்கான வெற்றிப் பாதை தடையின்றித் திறந்தி ருப்பதாகவே தோன்றுகிறது.

ஆனால் ஒன்று! அப் பாதையை மற்றவர்கள் தடுக்க வாய்ப்பிருக்கி றதோ? இல்லையோ? உங்களுக்குள் இருக்கும் 'உட்பகை' எனும் பெருந் தடை, உங்களைப் பெரியளவிற் பாதிக் கப்போவது மட்டும் நிச்சயம். 'சீற்' கேட்டு விண்ணப்பித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவ னும் தற்போது உங்களுக்குச் சங்கு ஊதச் சென்று விட்டார்.

உறவினரான சம்பந்தனின் பெருங் கருணையினால், பதவி பெற்றிருந்த காலத்திலேயே கட்சி உறுப்பினர்களின் கால்களை வாரிக் கொண்டிருந்த அவர், இனிச் சும்மா இருக்க மாட்டார் என்பது வெளிப்படை. உதயன், இனி உங்கள் தமிழரசுக் கட்சியைத் தாராள மாய் உதையும் என நம்பிக்கையாய் எதிர்ப்பார்க்கலாம்.

இப்போதே உங்கள் ஆட்களிற் சிலர், வேறு வேறு அணிகளாய்ப் பிரிந்து நின்று, தேர்தலைச் சந்திக்கப் போவ தாகச் செய்திகள் வருகின்றன. உங்களு க்குள் இருக்கும் பெரும்பகையாளி களான சுமந்திரனையும், ஸ்ரீதரனையும் உண்மையாய் ஒன்றுபடுத்தினால் அன்றி, இந்த அவலத்தை யாராலும் தடுக்க முடியாதென்றே தோன்றுகிறது.

ஒன்றை மட்டும் நீங்கள் மறந்து போகாதீர்கள்! நம் தமிழ்க் கட்சி களுக்குள் நீங்கள் முதன்மை பெற்றி ருப்பது உண்மையாய் இருக்கலாம். ஆனால் அதற்காக மட்டும் நீங்கள் பெருமைப்பட முடியாது. இம்முறை நீங்கள் எதிர்பார்க்காத ஓர் பேராபத்து உங்களை நோக்கி வரப் போகிறது. அது என்ன என்று சொல்கிறேன்.

அண்மையில் தனது இன பேதமற்ற, நேர்மையான, தேசப்பற்றுள்ள நடவடி க்கைகளால் இலங்கை முழுவதுமாய் 'விஸ்வரூபம்' எடுத்திருக்கின்ற ஜனாதி பதி 'அநுர'வின் பாதிப்பு, தமிழ் மக்களையும் பெரியளவில் ஈர்த்திருக் கின்றது. அதனால், ஜனாதிபதி 'அநுர' அணியினர், வடக்கில் நிறுத் தப் போகும் வேட்பாளர்களுக்கு, தமிழ் மக்களின் வாக்குகள் குவிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி மட்டும் நடந்தால், உங்களின் கதி அதோ கதியாகத்தான் இருக்கும்.

அதனால், சுய கௌரவங்களை விட்டு, உங்களின் தலைவர்கள் இருவரும் வருமுன் காக்கத் தவறுவார்களே யானால், வருங்காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் தேசியக்கட்சிகள் நிலை கொள்வதை எவராலும் தடுக்க முடியா மல் போய்விடும் என்பது மட்டும் நிச்சயம். சிந்தியுங்கள்!.

ஏற்கனவே, கழுதை தேய்ந்து கட்டெ றும்பாயிருக்கிறது மேலும் அதனைத் தேய்த்துக் காணாமற் போய் விடவும் செய்து விடாதீர்கள். வீடு தான் உங்க ளுக்கான விமோசனம்! பழுதுகள் நீக்கி அதனைத் தொடர்ந்து பாதுகாக்க முயலுங்கள்!. இன்பமே எந்நாளும் துன்பமில்லை

# ரணிலையும் கம்மன்பிலனையும் சந்தேகிக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித்

(3ம் பக்கத் தொடர்ச்சி) குழுவை முன்னாள் ஜனாதிபதி நியமித்துள்ளதாக தாம் சந்தேகிப்பதாக கர்தினால் குறிப்பிட்டு ள்ளார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணையை கையாள்வதற்கான ஒப்பந்தத்தை மேற் கொள்வதாகத் தெரிகிறது என்றும் கர்தினால் குறிப் பிட்டுள்ளார். உதய கம்மன்பில இத்தனை காலம் அமைதியாக இருந்தார். எனினும், இப்போது இதனை வெளிக் கொணர்கிறார் ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

# அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை

(15ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து தேர்தல்களில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்களு டைய அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு மக்கள் அமைப்பு மன்னிப்பு கேட்டது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு ஊடகச் சந்திப்பில் மக்கள் அமை ப்பின் பிரதிநிதிகள் அது தொடர்பாக விளக்கம் அளித்தார்கள்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப் பட்டது போல அவர்கள் மக்களுக்கு உண்மையைக் கூறினார்கள். பொது வாழ்வில் மக்களுக்கு உண்மையை கூறுவது மகிமையானது. அதற்கு ஒரு துணிச்சல் வேண்டும். அதற்கு ஒரு வாழ்க்கை முறை வேண்டும். பொது வாழ்வில் ஈடுபடும் பெரும்பாலான பிரமுகர்கள் மக்களுக்குப் பொறுப்பு கூறுவதில்லை.தனது செயல்களுக்குப் பொறுப்புக்கூறும் துணிச்சல் மக்கள் அமைப்பிடம் உண்டு என்பதனால் அது நாடாளுமன்றத் தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு மன்னிப்புக் கேட்டது.

தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு அரசறிவியல் விளக்கம் உண்டு. அதே சமயம் சங்குக்கு வாக்களித்த மக்களின் கூட்டுணர்வு வேறாக உள்ளது. மக்கள் மீண்டும் மீண்டும் கட்சிகளை ஒருங்கி ணைத்து வாக்குகள் சிதறுவதைத் தடுக்க வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை தொட ர்ச்சியாக நிறைவேற்ற முடியாமைக்கு மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மன்னிப்பு கேட்டார்கள்.

மக்களைச் சிதறடித்தது கட்சிகள் தான். அதற்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதும் கட்சிகள் தான். மக்களை ஆகக்குறைந்த பட்சம் ஒன்று திரட்டிய மக்கள் அமைப்பு அதைத் தொடர்ந்து எல்லாத் தேர்தல்களிலும் செய்ய வேண் டும் என்று எதிர்பார்க்கும் வாக்காளர் களின் கூட்டுஉணர்வை மதித்து பொறுப்பு கூறியது. அதை கட்சிகள் பின்பற்றுமா? சுயேட்சைகள் பின்பற் றுமா?

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமது மக்களுக்கு உண்மையை கூறாத வர்கள், பொய்யான வாக்குறுதிகளை வழங்கியவர்கள், தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிய வர்கள் அனைவரும் தமிழ்மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

பிரதான அரசியல்வாதிகளின் அணிகலன் களாக காணப்படும் இரண்டாம் மூன் றாம் நிலை அரசியல்வாதிகள் அநேகர் மீது ஊருக்குள் குற்றச்சாட்டுகள் உண்டு. பாலியல் குற்றச்சாட்டுக்கள், ரகசிய டீல்கள் போன்ற பல குற்றச் சாட்டுக்கள் உண்டு. தமது அணிகலன் களாக காணப்படும் இரண்டாம் மூன்றாம் நிலை முக்கியஸ்தர்கள் தொடர்பிலும் தமிழ் அரசியல்வாதிகள் மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டும். அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்பது தமிழ் படத்தில் வரும் கொமெடி வாக்கியமாக இருக்கலாம். ஆனால் தேசத்தை நிர்மாணிக்கும் அரசியலில் அது பகிடி அல்ல. பொறு ப்புக் கூற வேண்டிய விடயம். தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புக் கூறுவார் களா?

# விமல் வீரவன்ஸவும் தமிழ் அரசியல்...

(16ம் பக்கத் தொடர்ச்சி) தமிழரசுக் கட்சி தான் காரணம் என்று ஒரு கருத்து உண்டு. அங்கு தமிழரசுக் கட்சிக்கு வெற்றி வாய்ப்புகள் குறையுமாக இருந்தால் தேசியப் பட்டியல் மூலம் அந்த மாவட்டத்திற்குரிய பிரதிநிதித்துவம் தரப்படும் என்று எதிர்பார்ப்பு உண்டு. அப்படி ஒரு எதிர்பார்ப்பு இருக்கும் பொழுது சங்கோடு கூட்டை வைத்துக் கொள்வது வசதியாக இருக்காது என்று தமிழரசுக் கட்சி கருதியதாகத் தெரிகிறது. அதனால் அம்பாறை மாவட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தைப் போல ஒரு பகை தவிர்ப்பு உடன்படிக்கை யைச் செய்ய முடியவில்லை.

எனினும் திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் முன்னு தாரணம் எதை உணர்த்துகிறது என்றால், மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர் களும் சிவில் சமூகங்களும் இணைந்து கட்சிகளை ஏதோ ஓர் ஒருங்கி ணைப்புக்குள் கொண்டு வரலாம் என்பதைத் தான்.

ஜனாதிபதித் தேர்தலில் பலமாகக் காணப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்ட மைப்பு அதை இலகுவாக செய்திருந்திருக்க முடியும். ஆனால் அந்த ஐக்கியத்தை விடவும் பொதுச் சின்னத்தை வசப்படுத்துவதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை உறுதிப்படுத்தலாம் என்று ஒரு தொகுதி கட்சிகள் சிந்தித்ததன் விளைவாக தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு ஒரு கட்டத்துக்கு மேல் செயல்பட முடியாது போய்விட்டது. அதனால் தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகக் களம் இறங்கின. ஒருங்கிணைக்க அமைப்பு இல்லாத ஒரு பின்னணியில், சுயேச்சைகளும் களம் இறங்கின. இது தமிழ் வாக்குகளை எந்தளவுக்குச் சிதறடிக்க போகின்றது?

# அறுகம்பைத் தாக்குதல் திட்டம்:- சுன்னாகத்தைச் .....

(7ம் பக்கத் தொடர்ச்சி) நாட்டவர்களுடன் கூட்டிணைந்து மீண்டும் ஒரு நாச கார செயலுக்குத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே கடந்த 20 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்குச் சுன்னாகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாதத் தடுப்பு காவல் துறை பிரிவினரால் கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் இலங்கையில் வெளிநாட்டவர் களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், நாடு முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்த ப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு சுற்றுலா சென்றிருந்த இஸ்ரேலிய பிரஜைகள் 22 பேர் நேற்று 24 ஒக் 2024 அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலி ருந்து புறப்பட்டுள்ளனர். இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அறுகம்பை பகுதியில் வைத்து இஸ்ரேலியர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததால் மேலும் இலங்கையில் தங்கியிருப்பது ஆபத் தானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமும், இஸ்ரேலிய அரசாங்கமும் அறிவித்ததையடுத்து குறித்த இஸ்ரேலியர்களை பாதுகாப்பாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு அவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு ஒரு நிலையான கால அட்டவணைக்கமைய விமானங்கள் இல்லாததால், அவர்கள் துபாய்க்கு சென்று அங்கிருந்து இஸ்ரேல் செல்வார்கள் என தெரிவிக்க ப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள், பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் குற்றச் செயல்கள், குறிப்பாக அறுகம்பை பகுதியில் இடம்பெறும் அச்சுறுத்தல் கள் காரணமாக பயணிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கனேடிய அரசாங்கம் பயண ஆலோசனை ஒன்றை விடுத்துள்ளது.

# அநுரவின் பின்கதவு அரசியல் நகர்வும் சிறுபான்மை மக்களும்

- அழகு. குணசீலன் -

பிரிக்ஸ்: பொருளாதாரத்தில் துரிதமாக முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளின் கூட்டமைப்பு. பொருளாதார மந்தத்தை தனது வரலாற்றில் என்றும் இல்லாதவாறு சந்தித்திருக்கின்ற இலங்கையை இதில் அங்கத்துவம் பெறச் செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விண்ணப்பித்து இருந்தது. ரணிலின் ஏனைய சில திட்டங்கள் போன்று இதையும் தொடரப்போவதாக அறிவித்துள்ள புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆட்சி, ரஷ்யாவில் நடைபெறுகின்ற மாநாட்டிற்கு தூதுக் குழு ஒன்றையும் அனுப்புகின்றது.

மேலெழுந்த வாரியான பொருளாதார நோக்கில் இது முரண்பாடுடையது. ஏனெனில் துரிதமாக பொருளாதார வளர்ச்சி அடைந்துவருகின்ற ஒரு கூட்டில் வங்குரோத்து விளிம்பில் இருக்கின்ற இலங்கை அங்கத்துவம் பெறுவதும், ரணில் ஆட்சியை பொருளாதார ரீதியாக கடுமையாக விமர்சித்து வந்த அநுர ஆட்சி அதைத் தொடர்வதும் தான் அந்த முரண்பாடு.

அமெரிக்க ஆதரவு வலதுசாரி ரணில் ஆட்சியின் கொள்கை ஒன்றை இடதுசாரி ஆட்சி ஒன்று தொடர்கிறது. இதன் பின்னணியில் உள்ள பின்கதவு அரசியல் என்ன? அது இலங்கைக்கு பெற்றுத்தரக்கூடிய வெளிப்படையாக இனப்பிரச்சினை விவகாரத்தை தொடர்ந்தும் இந்தியா ஊதிப்பெருப்பிக்காது. இந்தியா ஈழத்தமிழர்களை கைவிட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டன. ஆகக்கூடியது கொழும்புக்கு 13ஐ இடையிடையே நினைவூட்டுவது, யாழ்ப்பாணத்திற்கு ஒற்றுமைப்படுகள்



என்று ஓதுவதும் மட்டும் தான். தமிழக தொப்புள் கொடி உறவு அறுந்த கனகாலம். இதனால் தான் தமிழ்நாட்டு தமிழீழ ஆதரவாளர்கள் சிவசேனாவையும், விஷ்வ இந்து பரிஷத்தையும் , இந்துத்துவாவையும் திருப்திப்படுத்த முயற்சிக்கிறார்கள். இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி காலத்தில் இலங்கைத் தலைவர்களுக்கு இருந்த தலையிடி ஒரு துளியும் அநுரவுக்கு ஜே.வி.பி. தேசிய இனங்களாக கொள்ள வில்லை. இந்திய, அரபுலக ஆதரவுடனான ஆக்கிரமிப்பாளர்கள் என்ற ஜே.வி.பி.யின் ஐந்தாவது விரிவுரையில் இருந்து அவர்கள் இன்னும் இம்மியும் அசையவில்லை. இதைத் தான் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்து உறுதிப் படுத்துகிறது. வடக்குக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை, மக்கள் பொருளாதார பிரச்சினைகளுக்கே தீர்வு தேடுகிறார்கள் என்ற கருத்தில் ரில்வின் சில்வா கயிறு திரித்துள்ளார்.

இவர்கள் இடதுசாரிகளா? இந்த இடதுசாரிகளை விடவும் தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கிறது அது அதிகாரப்பகிர்வு மூலம் தீர்க்கப் பட அது ஏற்படுவதற்கு அதிகாரப்பகிர்வும் அவசியமானது. அதிகாரத்தை சிங்கள தரப்பு மட்டும் வைத்துக்கொண்டு அது மற்றைய சமூகங்களுக்கு பங்கிடப்பட மாட்டாது என்ற கருத்து நாம் இலங்கையர் என்ற உணர்வை ஏற்படுத்தாது.

எப்படி சிங்கள தேசத்தில் அரசியல் அதிகாரத்தின் ஊடாக மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி முன்னெடுக் கப்படுகிறதோ அதே போன்று வடக்கு, கிழக்கு மலையகத்திலும் அரசியல் அதிகாரத்தின் பகிர்வு ஊடாக அபிவிருத்தி முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதை மறுத்து அதிகாரம் எங்களிடம் இருக்கும் அபிவிருத்தியை செய்து தருகிறோம் என்பது அடக்குமுறையின் வெளிப்பாடன்றி வேறில்லை.

கொழும்பு நிர்வாகத்தின் நிர்வாக முகவர்கள் ஊடாக முல்லைத்தீவுக்கு ரோட்டும், யாழ்ப்பாணத்தில் கண் சந்திர சிகிச்சையும், பாஸ்போர்ட்டும் செய்யக் கூடியதாக இருந்தால் அது தான் மக்களின் அபிலாஷை என்பது வேடிக்கையானது. சாதாரண தமிழ்,முஸ்லீம் மக்கள் அதிகாரப்பகிர்வை கோர வில்லை என்றால், அதே சாதாரண சிங்கள மக்களுக்கு அந்த அதிகாரங்கள் எதற்கு? அங்கும் அதிகார வர்க்கம் தான் தனக்காக தற்போது ஆட்சியை பெற்றிருக்கிறதா? இந்த முன்னறிவிப்புகள் அனைத்தும் புதிய அரசியலமைப்பு ஒன்று வந்தால் அதில் மாகாணசபை முறை முற்றாக நீக்கப் படும் என்பதற்கான கட்டியம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நிறைவேற்று அதிகாரம் தனி நாட்டை, சமஷ்டியை, ஏன் கிழக்கு மாகாண மக்களின் விருப்புக்கு மாறாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் வடக்கும், கிழக்கும் தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை அங்கீகரித்து, அதை அவர்கள் அதிகாரப்பகிர்வினூடாக நிர்வகிக்கின்ற வாய்ப்பை வழங்காத வரை, நாம் இலங்கையர் என்பது சிங்கள பௌத்த மேலாதிக்க கருத்தியல். சிறுபான்மை தேசிய இனங்களின் அடையாளங்களை மறுதலிப்பது. தேத் தண்ணிக்குள் போடும் சீனி போன்று சுய அடையாளங்களை மறைத்து சிங்கள பௌத்த பேரினவாதத்தினுள் கரைந்து விடுங்கள் என்று கட்டளையிடுவது. இந்த இலக்கை அடையவே ஜே.வி.பி. புதிய அரசியலமைப்பு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்ற கதையையும் விட்டிருக்கிறது.

பிரிக்ஸ் அங்கத்துவம் இந்தப் பாதையில் பயணிப்பதற்கான தடைகளை அநுர ஆட்சிக்கு நீக்குவதாக அமையப் போகிறது. சொந்த நாட்டில் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள சீனாவும், இந்தியாவும் இனிவரும் காலங்களில் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கப் போகின்றன. சிறுபான்மை தேசிய இனங்களுக்கான அடையாளங்களை நிராகரித்து, பெரும்பான்மை இனத்திற்கான அடையாளங்களை பேணும், பாதுகாக்கும் ஆட்சியைத் தவிர சிறுபான்மை மக்கள் ஜே.வி.பி.யிடம் இருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

பேசாப் பொருளாக உள்ள இராஜதந்திர பிராந்திய, சர்வதேச பூகோள அரசியல் நலன்கள் எவை? என்ற கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. அப்படி நன்மைகள் கிடைக்குமாயின் அதன் மூலம் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு கிடைக்கவுள்ள அடைவு என்ன?

இலங்கையின் போர்க்குற்றச்சாட்டு வெளியக விசாரணை, மற்றும் பொறுப்புக்கூறல் ஐ.நா.51-1 பிரேரணையை வழக்கமான சிங்கள, பௌத்த பேரினவாத மகிந்த, கோத்தபாய பாணியில் இடதுசாரி ஜே.வி.பி. - என்.பி.பி. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சி நிராகரித்திருக்கிறது. ஐ.நா. பிரேரணைக்கு எதிராக இலங்கைக்கான ஆதரவுத்தளம் ஒன்றை ஆயத்தப்படுத்த வேண்டிய தேவை இலங்கைக்கு உண்டு.



இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் உள்நாட்டு விவகாரம் என்று சீன வெளியுறவு நிலைப்பாட்டுடன் ரஷ்யாவும் இணங்கி இருக்கிறது. இதன் மூலம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட இரண்டு வல்லரசுகள் இலங்கைக்கு வலது மற்றும் இடது புறத்தில் இருக்கிறார்கள்.

பிரிக்ஸ் அங்கத்துவத்தின் பின்னர் இல்லை. பிரிக்ஸ் குளிசைத் துண்டு எழுதி இந்தியா கொடுத்துள்ளது. போர்க்குற்ற உள்ளக விசாரணையிலும் உண்மையை அறிவது மட்டும் தானாம் குற்றவாளிகளுக்கு தண்டனை இல்லை. ஜனாதிபதி அநுரவுக்கு போர்க்குற்ற உண்மைகள் கடந்த கால ஜனாதிபதிகளை விடவும் அதிகம் தெரியும். மேலும் எந்த உண்மையை தேடப் போகிறார் அநுர.

அநுரவின் வெற்றிக்கு இராணுவ சமூகத்தின் வாக்குகள் பெரும்பங்களிப்பை செய்துள்ளன. தனது அரசியல் எதிரிகளை களைவதற்காக ஊழல் விசாரணைகளை துரிதப்படுத்தும் அவர், பாதிக்கப்பட்ட ஒரு இனத்தின் குரலை கேட்க தயாராயில்லை. கடந்த கால கொலைகள் சிலவற்றை தேர்வு செய்து விசாரணை செய்ய முயற்சிகள் நடக்கிறது. இதில் 1989, 2022 ஜே.வி.பி.கால புத்திஜீவிகளின் கொலைகள் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டுள்ளன. ஷானி அபசேகர என்ற முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுரவின் ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் அவருக்காக பிரச்சாரம் செய்தவர். அவரை கொந்துராத்து அடிப்படையில் நியமித்து நிர்வாகத்தில் கட்சி அரசியலை சுத்தம் செய்திருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழ், முஸ்லீம், மலையக மக்களை வேண்டும் என்ற வலதுசாரிகள், மாகாண சபை முறையை அங்கீகரிக்கின்றவர்கள் பரவாயில்லை.


நாம் இலங்கையர் என்பது அழகான நாடு, வளமான தேசத்திற்கு மிகப் பொருத்தமான கோஷம். ஆனால் இதற்குள் மறைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த பேரினவாத பண்புகள், குணாம்சங்கள் இல்லாதவரை மட்டுமே. அவற்றில் எந்த அடிப்படை மாற்றமும் இன்றி பௌத்தத்திற்கு முன்னுரிமை, புத்தசாசன அமைச்சு அமைச்சர் விஜயகேரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிங்கள மொழிக்கான முன்னுரிமையில் மாற்றம் இல்லை.

பௌத்த குருமார்களின் கால்களில் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் வீழ்ந்ததை விடவும் நன்கு கூனிக் குறுகி வீழ்கிறார்கள். விளைவு: தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை. அவர்களின் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை. மார்க்சிய நோக்கில் அடிப்படையில் அனைத்தும் பொருளாதார நோக்கை கொண்டது என்பதை மறுப்பதற்கில்லை. அது ஒரே தேசிய சமூகக் கட்டமைப்பை கொண்ட நாடுகளிலேயே வெற்றியளித்திருக்கிறது(?).


இலங்கையில் தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினர் முதலில் தங்களை அவர்களின் அடையாளம் சார்ந்து பெரும்பான்மை இனத்திற்கு சமமான உளவியல் உணர்வை பெறவேண்டும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவையான நிதி உதவியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எதிர் பார்த்த நல்ல செயல்கள் நடக்கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர் பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.





சிம்மராசி அன்பர்களே! துணிச்சலாக எதையும் செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! நினைத்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக்கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப்பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.





துலாம் ராசி அன்பர்களே! எதிலும் அவசரப்படாமல் நிதானமாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறுவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக்கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.





விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.








தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரம் விருத்தியடையும். ஏற்கனவே வரவேண்டி இருந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். வர வேண்டிய பணம் வந்து சேரும். சாமர்த்தியமான பேச்சினால் காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.




கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.




மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## தமிழ் மக்களை சீரழித்த தமிழ்த்தேசியக்...

(17ம் பக்கத் தொடர்ச்சி) தோற்றம் கொண்டது. ஒரு அணி அரச சார்பு அல்லது மென்னிலை அரச எதிர்ப்பு அணியாகவும் மறு அணி அரச எதிர்ப்பு தீவிர அணியாகவும் மாறியது. அதற்குள்ளும் உப அணிகள் உண்டு. ஆனாலும் இரண்டு வகையான போக்குகளே பெரிதாக அடையாளமாகின. சம்மந்தன், சுமந்திரன் போன்றோர் அரச ஆதரவாளர் களாக துரோகிகளாகச் சித்திரிக்கப் பட்டனர். மறு தரப்பினர் தம்மைத் தியாகிகளாகக் காட்ட முற்பட்டனர். ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் இந்தக் காட்சிப்படுத்தல் தான் நடந்தது. ஏன் இப்போதும் அப்படியான ஒரு தோற்றப்பாட்டை முன் வைத்தே தமிழ்த்தேசியவாத அரசியல் முன்னெ டுக்கப்படுகிறது. ஆக எப்போதும் கதாநாயகன் வில்லன் என்ற வகையிலான அரசியலையே தமிழ்த்தரப்பு முன்னெடுத்தது. 1.தமிழ்த் தேசியவாதத் தரப்பு எதிர் அரசு மற்றும் சிங்களத் தேசியவாதம். 2.அரச ஆதரவுத் தமிழ்த்தேசியம் அல்லது மென்னிலைத் தமிழ்த்தேசியம் எதிர் தீவிர நிலைத் தமிழ்த்தேசியம். இதைச் சூடேற்றும் அரசியல் எனலாம். அதாவது எப்போதும் ஊடகங்களிலும் பொது வெளியிலும் தம்மை — தமது குரலைப் பேசுபொருளாக (விவாதப் பொருளாக) வைத்துக் கொள்வதே இதனுடைய உத்தியாகும். இதனால் என்ன பயன் விளைகிறது என்பதையிட்டு இவர்களுக்கு எந்தக் கவலையும் இருக்கவில்லை. எத்தகைய அக்கறைகளும் இருந்தது கிடையாது. இதனால் இதற்கு அரசியற் பெறுமானங்கள் எதுவும் இல்லை. என்பதால்தான் மக்கள் இவற்றை இவர்களை நிராகரிக்க முற்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த அரசியலை முன்னெடுத்தவர்கள் கண்முன்னே பிரமுகர்களாகி வளர்ச்சியடைந்தனர். சொத்துகளைச் சேர்த்தனர். உலகச் சுற்றுப் பயணங்களைச் செய்தனர். இறுதியில் சாராயக்கடைகளை அரசிடம் சலுகையாகப் பெற்று அதை விற்பனை செய்வது வரையில் சென்றனர்.

பதிலாக இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகளும் மக்களும் வரவரப் பலவீனப்பட்டனர். ஒருசாரார் இது சரிப்படாது என உணர்ந்து நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்தனர் புலம்பெயர்ந்து கொண்டுள்ளனர். இவையெல்லாம் மக்களுக்குக் கடுமையான ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தின. இதனால் இந்தச் சக்திகளின் மீது சனங்கள் வெறுப்படைந்துள்ளனர். இந்த வெறுப்பை தேசிய மக்கள் சக்தி அறுவடை செய்கிறது. இன்னொரு நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த ஆதரவைப் பெறும் நிலை உண்டு.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்த வரையில் அது மட்டும் தான் தமிழ் பேசும் சமூகங்களை வெளிப்படையாக ஆதரித்தும் அரவணைத்தும் செல்லும் தரப்பாக தற்போதுள்ளது. அதனால், அதற்கும் ஒரு ஆதரவுத் தளம் காணப்படுகிறது. சற்றுச் சிந்திக்கக் கூடியவர்கள், தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஆதரவை அளிப்பது அதனைக் கேள்விக்கிடமில்லாத வகையில் பலப்படுத்தி, அதிகாரத்தின் உச்சத்துக்குக் கொண்டு போய் விடும். அதற குப் பிறகு, அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய பலமோ வல்லமையோ நாட்டு மக்களுக்கு இல்லாமற் போய் விடும். ஆகவே அதைச் சமனிலைப்படுத்தக் கூடிய அளவுக்கு ஒரு பலமான எதிர்க் கட்சி (கீரைக்கடைக்கும் ஒரு எதிர்க் கடை) வேண்டும் என்று கருதுகிறார்கள்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடியதேயாகும். ஏனெனில், வரலாற்றில் எப்போதும் கேள்விக்கிடமில்லாத அதிகாரம் விளைக்கின்ற அநீதி எளிதாக இருப்பதில்லை. அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னே முற்போக்கு — ஜனநாயக சக்திகளாகத் தம்மைக் காட்டிக் கொண்ட தரப்புகள், அதிகாரக் கட்டிலில் ஏறிய பின்னர் நடந்து கொண்ட கசப்பான வரலாற்று அனுபவங்கள் ஏராளமுண்டு. என்பதால் சமனிலைப்படுத்தக் கூடிய ஒரு தேர்வை மக்கள் செய்ய வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியவாதச் சக்திகள் மட்டுமல்ல, முஸ்லிம் தேசியவாதக் கட்சிகளிடத்திலும் பலவீனமான நிலையே உண்டு. ஆகவே இதையெல்லாம் கடந்து ஒரு வலுச் சமநிலையைக் காணக்கூடிய அரசியற் தெரிவை மக்கள் செய்வதற்கு யார் வழிகாட்டுவது? அது நாட்டுக்குச் செய்யும் பெருந் தொண்டாகும். அதுவே தமிழ் மக்களுடைய அவர்களுடையதேசியஇருப்புக்கும் உதவும்.

## தாயக அரசியலை தத்தமது கட்டுப்பாட்டுக்குள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) இவரால் பல கோடி ரூபாக்கள் கொடை வழங்கப் பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும் தொழிலதிபர் என்ற வகையில் தனது வர்த்தக நலன்சார்ந்து இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு நிதி வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தேர்தல் நன்கொடை வழங்குவதன் நோக்கம் தான் என்ன? அதிலும் புதிய அரசியல் கட்சி தொடங்கி பண பலத்தால் தமிழ் மக்களின் அரசியலைக் கட்டுப்படுத்த விரும்புவதன் பின்னாலுள்ள தேவைகள் என்ன? இப்பொழுதே விலை போகத் தொடங்கி விட்ட நமது அரசியல் தலைவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்வார்கள் என்று ஊகிப்பது கடினமானதொன்றல்ல.

எனவே புலம்பெயர் தமிழ் குழுக்களாலும் அமைப்புகளாலும் பணத்தினூடாகச் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர் அரசியலில் இந்த தொழிலதிபரின் தலையீடு ஆரோக்கியமானதொன்றாக இருக்கப் போவதில்லை. தனது வர்த்தக நலனுக்காக தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் நலனையும் இலங்கை ஆட்சியாளரிடம் அடகு வைப்பதற்கான ஒரு முயற்சியாகவே இது கருதப்பட வேண்டும். மக்கள் நலன் கருதி இதற்கு எதிரான நிலைப்பாட்டினை எடுக்கும் நிலையிலும் பெரும்பாலான அரசியல் தலைவர்கள் இங்கில்லை. எரிகிற வீட்டில் பிடுங்குகிறது மிச்சம் என்ற மனநிலையிலேயே அவர்கள் உள்ளனர். புலம்பெயர்அமைப்புகள் ஒரே குடையின் கீழ் ஒரே கொள்கையினடிப்படையில் இயங்குகின்ற போது அல்லது அரசியல் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் புலம்பெயர் தரப்புகள் வழங்கும் நிதி நிறுத்தப்படும் போது மட்டுமே தமிழ் மக்களின் அரசியல் சரியான பாதையில் செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆனால் அதற்கான எதிர்காலம் அண்மையில் இருப்பது போலத் தெரியவில்லை.

(5ம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறான பின்னணியில் இருவரையும் சமரசப் படுத்தும் முயற்சியில் கட்சியின் துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஈடுபட்டார். முதற்கட்டமாக, இருவரையும் வேட்பு மனுத்தாக்கலின் போதும், வேட்பாளர் அறிமுக நிகழ்வின் போதும் ஒரே சமயத்தில் பிரசன்னமாவது உள்ளிட்டவற்றில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளது. இந்நிலையில், இருவருக்கும் இடையில் முழுமையான சமரசத்தை ஏற்படுத்துவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், தேர்தல் செயற்பாடுகளில் சுமந்திரனும் சிறிதரனும் தனித் தனியாகவே பிரசாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த சிங்கள இராணுவத்தை மீட்பதில் சிக்கல் - அரசாங்கம்



வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம். அவர்கள் உத்தியோகபூர்வமற்ற இராணுவத்தில் சட்ட ரீதியற்ற முறையில் இணைந்துள்ளதால் இராஜதந்திர ரீதியில் இவ்விடயத்தை அணுகுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாடு 22 ஒக் 2024 செவ்வாய் கிழமை இடம் பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் முன்னாள் முப்படை வீரர்கள் தொழில் வாய்ப்புக்காக ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைந்தவர்களின் பெரும்பாலானோர் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவரிடம் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ்வாறானவர்களை மீண்டும் ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும், தற்போது காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பது இலகுவான விடயமல்ல. இன்று அந்த தீவிர யுத்தம் இடம் பெற்று வருகிறது.

எவ்வாறிருப்பினும் வெளிநாட்ட லுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் நாம் இந்த விவகாரத்தில் அவதானம் செலுத்தி வருகின்றோம். ஆனால் முழுமையான தகவல்களை குறுகிய காலத்துக்குள் வழங்க முடியும் என்று எம்மால் கூற முடியாது. எனவே முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்கின்றோம். அதற்கமைய இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர தொடர்புகள் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.சட்ட ரீதியாக ரஷ்ய இராணுவத்தில் இணைந்திருந்தால் அவர்களை இலகுவாக நாட்டுக்கு அழைத்து வர முடியும். ஆனால் இவர்கள் சட்டத்துக்கு முரணாக உத்தி யோகபூர்வமற்ற இராணுவத்தில் இணைந்திருப்பதால் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலகுவானதல்ல என்றார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா – 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
**சங்கீத சங்கமம் 2025**
விபரங்களுக்கு:- 416 841 9600

